ரிஜிஸ்டர் நம்பர் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை {உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா}

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபால் உள்பட ... ரூ 3—0 | | வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 12. |
| 6 மாத சந்தா ,, ... ரூ 1—12 | வாரப்பதிப்பு. | கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2. |
| வெளிநாட்டிற்கு ,, ... ரூ 4—0 | ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி. | நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மலர் 4 | ஈரோடு, விபவ ஸு மார்கழி மீ 2உ (16—12—28) ஞாயிற்றுக்கிழமை. | இதழ் 34

அநேக தங்க மேடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

## [ரூ. 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அன்றுடம் கிரமமாய்மலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும். 24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த நாதை கட்டி நீடித்த போக சக்தியையும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0 வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், ஸ்நானபான அனுபானம் முதலியவைகளும், குணமானவர்களிற் பலரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரங்களும் அச்சிடப்பட்ட நமது பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்

1. பர்மாவிற்கு:— மு. ச. வடிவேல் பிள்ளை, காந்தி கதர் நிலயம், மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர், கடைத்தெரு, மாயவரம்.
3. திருச்சிக்கு—: கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, புகையிலை மண்டி, 54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கம் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்.
5. தென் ஆற்காட்டிற்கு:—வி கே. எஸ். அய்யர். & கம்பெனி, சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்.

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

**தண்டபாணி வைத்தியசாலை,**
292, மிண்டு பஜார், மதராஸ்

சந்தாதாரர்களுக்கு

## அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியும்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

**ஆனந்த விகடன் ஆபீஸ்,**
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311-
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

## மதனாகமம்.

(புதுச்சேரி பதிப்பு.)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிடலீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம். விலை ரூ 1—0—0. வஸந்த நிலயம். ரங்கப்பிள்ளை வீதி புதுச்சேரி.

## திருப்பூர் பனியன்ஸ்,

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0

வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR (S. India.)



## பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கு, லேபில்களுக்கும், இன்னும் இதர அச்சுவேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லைன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கப்படுவது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனம்.

ஜான் பிரான்கீஸ், சொந்தக்காரர்
பால் டியன் ஸ்டுடியோ
173, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.



எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

## டேபில் டைம்பீஸ் இனும்!!



எங்கள்ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபின் டைம்பீஸ் இனுமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் உத்திரவாதமானது. முத்தங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்,

ஜினைன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.



அநேக காக்ஷிகளில் போன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச்செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேடலாக் இனம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பின் பாக்கெட் ரூ 2 10 சாம்பின் பாக்கெட் ரூ 1-4-0.காட்டு காய்கறி ரூ 2-8-0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
வெட்னர்சரி தோட்டம், சேலம்.



தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

'ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

# அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதினியில் இதுபோன்ற மூதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகையொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவினோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1-4-0. மாதிரி காப்பி இனும்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.



"ஏன் வீணாக அவஸ்தைப் படுகிறீர்கள்"
உடனே எழுதுங்கள்.

## அமிர்த சாரம்.




ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் குவிந்துவருகின்றன. மனிதனுக்கு ஏற்படும் எல்லா வியாதிகளையும் துளிக்கணக்கில் உபயோகிக்க, நிமிடக்கணக்கில் ஆச்சரியமாய் குணமடையலாம்.

ஒரு புட்டியின் விலை 2—0—0 கேட்லாக் இனும்.

Apply to— சங்கராம் மெடிகல்ஹால், குகை, சேலம். (S. I. R.)



குறைந்த விலை! குறைந்த விலை!!


இன்னும் ஒரே மாதம் வரையில்!

கீர்த்தி பெற்றதும் இந்தியாவில் ஏராளமாகச் செலவானதுமான

## பாக்கெட் டிடக்டிவ்

அல்லது

## லீ பாக் ராஸ் கோப்.



என்னும் நூதன அமெரிக்கக்கருவியை அசலுக்கும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம்.

இக்கருவியினால் திரும்பிப்பாராமலேயே உங்கள் பின்னே நடப்பதைத் தெரிந்து கொள்ளலாம். உமது காதலி பின்னாலிருந்துகொண்டு செய்யும் செய்கைகளை அவள் தெரிந்து கொள்ளாமலேயே அறிந்துகொள்ளலாம். ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இத்துடன் நான்கு லீலா விநோத பிரஞ்சு போட்டோக்கள் இனுமாகச் சேர்த்து அனுப்பப்படும். ஒரு கருவியின் குறைந்த விலை ரூ. 1—4—0. ஏககாலத்தில் உள்நாட்டிலிருந்து இரண்டு கருவிகள் தருவித்தால் தபால் செலவில்லை.

தி. பான்ஸி வாட்சு அவுஸ், மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

# பண்டிதர்களுக்குப் பகை அவர்கள் படிப்பே யன்றி "குடி அரசு" அல்ல.

(6-ம் கட்டுரை)

கைவல்ய சாமியார் எழுதுவது.

சமய சாஸ்திரமென்றும், தர்க்கமென்றும், கோபமென்றும், பிரயோஜனமற்ற சரக்குகளால் சரிப்படைவதை நிறுத்தி, அபினிசாப்பிடுவதைப்போன்று மயக்கத்தை மனோகோசத்திற்கு கொடுப்பதற்காகவன்றி வேறொன்றுக்கும் பிரயோஜனப்படாத புஸ்தகக்கல்விகளினூடே உழன்று தள்ளாடிக்கொண்டு தவிப்பதை விட்டு, நம்முடையமூட வழக்கங்கள் எல்லாவற்றையும் ஆதரித்து அவற்றிற்குக் கூறப்படும் ஞாயங்கள் சாஸ்திரீயமானவை என்று சொல்லுவதையும் தள்ளி, நம் இருதயத்தின் அடிவாரத்தினின்று எழும் எண்ணத்தை எடுத்து பிரகிருதியானதொன்றுக்கு ஆதார பல வித சக்திகளால் ஆக்கப்பட்டிருந்தாலும், இவைகளுக்கெல்லாம் பொதுவாக ஒவ்வொரு சக்திகளினூடேயும் அவைகளையெல்லாம் தாங்கிக்கொண்டு, மகாபலம்பொருந்தி, என்றும் மாறாத நித்தியமான ஒற்றுமைத்தன்மை அமைந்திருப்பதுபோலவே, ஒவ்வொரு மனிதனுள்ளும் இந்த ஏகத்துவம் அமைந்திருக்கிறது. இதை நினைந்தே எங்கும் நிறைந்தது சிவமாயிற்று என்பதைத் தெரிந்து மனிதர்களுக்குள்ளிருக்கும் இவ்வளவு வித்தியாசங்களினூடேயும் அதை வெளிப்படச்செலுத்தி எல்லாவற்றிற்கும்பொதுவான ஒருசமரசத்தன்மையை பரப்பவேண்டும் என்கிற காரணத்தினாலே ஒவ்வொரு மனிதனுடையவும் கொள்கை நடை முதலியவை எப்படியிருந்தாலும் அவைகளை லக்ஷியம்செய்யாமல் சமரச சன்மார்க்கத்தைப்பரப்பவும் தெய்வீகத்தன்மையின் காக்ஷிகளையும் சாதிகளையும் எல்லாம் நீங்களும்கண்டு மற்றவர்களுக்கும் காட்டும்படியாகவே "குடி அரசு" உங்களையும் கூப்பிடுகிறது.

காசி விஸ்வநாதர் ஆதி சங்கராச்சாரிக்கு உபதேசம் செய்ததை முன் வியாசத்தில் சொன்னேன். அதை நினைத்துக்கொண்டே இதையும்படியுங்கள். நம்முடைய சிவபெருமானுக்கெல்லாம் பெரிய சிவபெருமான் காசி சிவபெருமான். அங்கிருந்துதான் ஆயிரத்தெட்டு சிவனும் தென்னாட்டிற்கு வந்தன. அதன் பெண்ஜாதி பிள்ளைகளும் மந்திரங்களும் அங்கிருந்துதான் வந்தன. வடதேசத்துசாமியானதினால் அதற்கு வடமொழிதான்தெரியும். அதைஉத்தேசித்துத்தான் மந்திரங்களெல்லாம் வடமொழியிலேயே இருப்பதும் சொல்லுவதும்சாமி வேதாசலம் சொல்லுவதுபோல ஆதிசைவக் குருக்கள் நமது தயாதிகளாக விருந்தாலும்சாமிக்குத்தெரிந்தபாஷையையேப்படித்து அதிலேயே மந்திரமும் சொல்லுவதும் பார்க்கிறோம். அந்த சாமிகள் நம் நாட்டுக்கு வந்து அநேக நாளாயும் நம நாட்டுப்பாஷை இனியும் கற்றுக்கொள்ள வில்லை. நம் பழையசாமிகள்கூட அந்தசாமிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு நமது பாஷையை மறந்துவிட்டு "ஆங்கு எப்படி யானாலும் தெய்வலோகத்தில் தேவர்கள் நம்மைச் சேர்க்கமாட்டார்களோ" என்று பயந்து வடமொழி மந்திரமே வேண்டுமென்கிறது.

கடவுள் எந்த ஜாதியில் பிறந்தாலும் பாப்பார ஜாதியாய் விடுவதால் நம் பாஷையை அந்தசாமி கற்றுக்கொள்ளாது. ஏனெனில் "ஆசார ஒழுக்கமில்லாமல் கண்டதைப்புசிக்கும் தாசி மக்களான சூத்திரஜாதி" பாஷைகடவுளுக்குத் தெரிந்தால் பாவம் வராவிட்டாலும் நரகத்திற்குப் போகாவிட்டாலும் படை எடுப்பில் ஓடி ஒளிவதெப்படி? நடராஜப்பெருமான் சமுத்திரத்திற்கிடந்து வெள்ளக்காரன் துப்பாக்கியைக்கண்டு கரைவந்து ஊராரிடமெல்லாம் கட்டளைவாங்கி தானும் தின்று தன்னோடுவந்த மூவாயிரம்பேர் வீட்டிலும் பொட்டைக்கலியாணமாக விளங்குவதெப்படி? கோட்டைவாசலுக்குத் தானும் சுவருக்குக்கல்லுமானதெப்படி? பூமிக்குள் குப்புறப்புதைந்து வெள்ளைக்கார நீதியால் வெளியில் வந்து அவர்கள் நீதிமன்றத்தில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள குடிகள் பணத்தையெல்லாம் கொட்டம் பரத்துவதெப்படி? ஆயிர முடியையுடைய ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டிருக்கும் திருவனந்தபுரம் அனந்தசயன ஆதிநாராயணர் பயந்தோடி ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுந்து அவர்களின் ஆசீர்வதத்தால் அங்கு குடியிருந்து Y மார்க்கா U மார்க்கா என்று அவர்கள் நீதியில் எல்லாரும் காணத் தீர்ப்புப்பெற்று அங்குள்ளவர்களை அன்னிய மதத்திற்கு இனியும் ஓட்டிக்கொண்டிருப்பதெப்படி?

தேவாரமும் திருவாய் மொழியும் பின்னால் நிறுத்தி முன்னால் வந்தால் பிடரியில் ஏன் கை வைக்கிறார்கள்? நம்மிடம் இதம்பேசும் பார்ப்பனர்களைத் தவிர எத்தனைபேர் இதை மனதார வேண்டுகிறார்கள். ராஜாங்க சபையில் மற்றபாஷைகளில் பேசலாமென்றாலும் கவர்னரும் அவர் மெம்பர்களும் எவ்வளவுதூரம் அதை கவனிக்கிறார்கள்? அவர்கள் அங்கீகரிப்பதாகப் பாசாங்கு செய்தாலும் இந்தியா மந்திரிக்கு எப்படி அர்த்தமாகும்? அதுபோல குருக்களும் ஆச்சாரிகளும் தமிழ் படித்தாலும் சுவாமிக்கு அர்த்தமாகாது என்பது தீர்மானமாய் விட்டதே. ஆதிசைவக் குருக்கள் அப்படியே இருக்கட்டும். இப்பொழுது வந்திருக்கும் தேசிகர் ஓதுவார்களான சைவத்தமிழ்க் குருக்கள் கூட கலியாண மந்திரம் தமிழில்சொன்னால் கலியாணத்திற்கு அர்த்தமாகாதென்று பிள்ளைப்பாட்டுப்பாடுகிறார்கள். மந்திரம் வடமொழியாகவிருக்கிறது மட்டுமல்ல, ஓமம், வேள்வி. பூசை பிள்ளையார் அழைப்புப் பொங்கல், பழ அரிசி, தெக்ஷிணை தேங்காய் பழம் மந்திர முணுமுணுப்பு. காரிய முணுமுணுப்பு. பெரியஜாதி ஆசார உயர்வு என்னும் நடிப்பு, பந்தியில் மறைவு என்னும் பாசாங்குகளை பார்ப்பான் இவர்களிடமிருந்து இன்னும் படிக்க வேண்டுமென்பது போலிருக்கிறதே. கலியாண மந்திரங்கள் கூட தமிழில் வரப்படாதென்று கடவுள்கட்டளையுண்டா? வடமொழி மந்திரம் தமிழன் சொன்னால் சுரம் தவறிப்போய் பாவம் வந்து விடுமென்னும் பாசாங்குத் தமிழிலுமுண்டா? தமிழ் பாஷையைச்சரியாய் உச்சரிக்கும் பண்டிதனில்லையா? கலியாணத்தைத் தமிழில் சொல்லவராதா? சொன்னால் கலியாணமாகாதா? இதற்குக்கூட அகச்சான்றுவேண்டுமோ? அகச்சான்றும் புறச்சான்றும் ஆராய்ச்சிச்சான்றும் உடைய பண்டிதர்கள் பாப்பான் முணுமுணுப்புச் சான்றுக்கு முன்னால் ஏன்வரப்படாது?

காசி பெரியசுவாமிக்கு ஜாதி யில்லை, சைவமில்லை, பெரிய புராணமில்லை, சர்ப்பகிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம்; நிர்த்தமண்டபம், ஸ்நான மண்டபம், நந்தியின் பின்புறம், முன்புறம் அந்தர் ஆரம், மத்திய ஆரம், துவிஜஸ்தம்பம், ஐந்தாம் பிரகாரம் என்னும் வரிசைகளில் தெரிசனத்திற்கு ஆள் நிறுத்தும் அமைப்புமில்லை. அந்த பெரியசாமியின் அம்சமான இந்த சாமிகளுக்கு இந்த வித்தியாசமேன்? சிலர் கிட்டநெருங்கினால் செத்துப்போவதும் சிலர் பக்கம் நெருங்கினால் காசிக்கு ஓடிப்போவதுமாக விருக்கிறது. பின் காசியில் தீர்த்தம் கொண்டுவந்து கும்பாபிஷேகமோ பிராயச்சித்தமோ செய்தால் உயிர்வந்துவிடுகிறது. இதன் ரகசியமென்ன? வடதேசத்தில் ஒரேபந்தியிலிருந்து சாப்பிட ஆக்ஷேபணையில்லை சாம்பலும புளியும்பட்டால்வெங்கலமும் பித்தளையும் சுத்தமாய் விடுமென்னும் ஸ்மிருதியின் விதியை அனுசரித்து ஒருவன் சாப்பிட்ட தட்டில் மற்றவனும் சாப்பிடலாம். வடதேசத்து ஓட்டல்களில் எல்லாருக்கும் தட்டுதான் வைக்கிறார்கள். நமது சென்னை காப்பி ஓட்டலில்கூட ஒரேமேஜையில் "உயர்ந்த ஜாதிக்காரர்"களும் 'தாழ்ந்த ஜாதிக்காரர்"களும் ஒன்றாய் சாப்பிடுகிறார்கள். கிராமங்களுக்குவந்தால் மறைவும் தனிவீடும்பார்க்கிறார்கள். இதுஏன்? நமது இதிகாச புராணங்களில் அங்கொரு விதமும இங்கொரு விதமுமாகச்சொல்லியிருப்பதைப் படிப்பவர்கள் அதைப்போலவே அங்கொருவிதமும் இங்கொரு விதமுமாக விருக்கிறார்கள் போலும்.

நமது வேத ஆகமங்களில் மிலேச்சரென்று தள்ளப்பட்ட வெள்ளைக்காரர்களுக்கும் மற்றவர்களும் கிளிகூண்டு மண்டபம் வரையிலும் வரும்படி உத்தரவுகொடுத்து சுவாமியின் அலங்காரமும் ஆபரணமும் காட்டி மாலைபோடுவது எந்த ஆகம சாஸ்திர சித்தாந்தம்? ஆங்கிலேயர் ஆடுமாடுதின்னுவதில்லையா? மது அவர்களுக்குக் கசப்பா? ஆதிதிராவிடருடன் ஆடிப்பாடுவதில்லையா? ஆதிதிராவிடர்களால் ஆக்கப்பட்ட ஆகாரமல்லவா அவ்வெள்ளைக்காரர்கள் உடம்பெல்லாம் நிறைந்திருக்கிறது? அவர்கள் ஆயா வளர்த்தும் குழந்தைகள் தானே இவர்கள். அவர்கள் அணிந்திருக்கும் உடை எல்லாம் ஆதிதிராவிடர்கள் கைபடாமலா அவர்கள்மேல் வந்துவிட்டன? இதிலெல்லாம் தீட்டில்லையா? இந்த தீட்டெல்லாம் வெள்ளைக்காரர்கள் தயவின் அதிகாரத்திற்கு பயந்தா அல்லது அவர்களுக்கு தர்மகர்த்தா போடும் கும்பிடுனாலா அல்லது அவர்களுக்கு குருக்கள் செய்யும் ஆசார வணக்க ஒடுக்கத்தினாலா ஆகமத்திலிருந்து அப்பால் போய்விட்டது? அல்லது முன் செல்வரித்தசில் பாக்கி நம்மையும் சீரழித்து இனிப் பண்டிதர்களையும் பரிசவிக்க விடும்படி மண்ணளித்து மாண்டுபோயிற்றோ?

நம் தேசத்தில், நம் சமூகத்தில், நம் கழனியிலிருந்துகொண்டு, நம் தெய்வங்களின் பேரையே வைத்து, நம் மதக் குறியையே அணிந்து, நம்மையே பெரியவர்களாக நினைத்து, நம் ஆசார அனுஷ்டானங்களையே கொண்டு, நம் தெய்வ வழிபாடே செய்து வரும் நம் மதஸ்தர்களை கோவில்களுக்குள் விடாமல் தடுக்கும் சாஸ்திரமோ அதை ஆதாரமாகக் கொண்ட கடவுளோ ராமசாமி நாயக்கர் சொல்லுவது போல, அழிந்து போனால் என்ன நஷ்டம் வந்து விடும்? நமது சமூகங்களில் அடிப்படையான தைரியமும், சக்தியும், விஸ்வாசமுமுடைய ஜனங்கள் அன்னிய மதத்திற்குப் போய் நம் சமூகம் குறைந்து அழிந்து போகுமென்பதை யாரும் சொல்லுகிறார்களே. திருவள்ளுவர் சொன்ன குறளையும் பராசர் சொன்னபராசர்ஸ்மிருதியையும் பண்டிதர்கள்பிரசங்கத்தில் பிரமாணம்காட்டி, பெரும் பண்டிதர்களென்றுபேரும்பெறுகிறார்களே. திருவள்ளுவரும் பராசரும் நம்பாட்டனா? ஆதிதிராவிடர்கள் பாட்டனல்லவா? அந்த அளவிற்காவது நமக்கு விஸ்வாசமிருந்தால் அவர்களை கோவிலுக்குள் விட நான் ஒத்துக் கொள்ளமாட்டேன் என்று சொல்ல எந்த பண்டிதத்திறமைக்குத்தான் மனம் வரும்? நம்மால் தாழ்த்தப்பட்ட ஜன சமூகங்கள் அன்னிய மதத்தில சேர்ந்து அந்த மதப்பேரை வைத்துக் கொண்டால் கோவில் உள் பிரகாரத்திலும் வீதியிலும் நம் வீட்டிற்கும் வரலாம்; தொடலாம், இதற்கு எந்த ஆகமம் இடம் கொடுத்திருக்கிறது? அந்த ஆகமத்தை அந்த அளவிற்காவது இவர்கள் பேரில் திருப்பி சிறிது மனமிறங்கும் படிப்பைப் பண்டிதர்கள் படிக்க வேண்டு மென்பதே "குடி அரசின்" கோரிக்கை.

அநேக காலமாக நம் மதமிருந்தும் அதற்கு ஆதாரமாக வேதங்கள், வேதாந்தங்கள், தர்மசாஸ்திரங்கள், தந்திரங்கள், புராணம், இதிகாசம்,

(இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

## இதிகாசங்கள்.

### இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(7-ம் கட்டுரை தொடர்ச்சி)

திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்

சகோதரனாகிய பரதனை வஞ்சித்து நாடாள எண்ணி புத்திரத்துரோகியாகிய தசரதனோடு கூடி முயன்ற தீயவனாகிய இராமன் கைகேசி வீட்டில் தசரதன் வாடிய முகத்தோடிருந்ததைக் கண்டவுடனே திகிலடைந்தான். தசரதனுக்கு அவ்வருத்தம் தன்னை யொட்டியே ஏற்பட்டிருக்க வேண்டுமென எண்ணுகிறான். அதாவது தன் முடி சூட்டைக் கைகேசி கலைத்திருக்கவேண்டும். அதனாலேயே தசரதன் வருத்தமுற்றானெனத் தீர்மானித்து உண்மையை அறிய ஆவலோடும் கைகேசியிடம் தந்திரமாக "நான் ஏதாவது தவறுதல் செய்தேனா, அன்றி அரசர்க்கு நோயா, அல்லது நீ அவன் மனம் வருந்தக்கூடிய பேச்சைப் பேசினாயா" என்று கேட்கிறான். இராமனைப் போலும் தந்திரசாலிகளைக்காண்பதரிது. சரித்திரங்களிலும் இவனைப்போன்றார் ஒரு சிலரே காணப்படுகின்றனர். முதலில் குற்றத்தைத்தன் மீதேற்றிக் கடைசியில் கைகேசி ஏதாவது கேடு செய்ததுண்டா எனத்தன் குறிக்கோளைக் கேட்கிறான். கைகேசியும் சாமானியமானவளா? இராமனிடத்திலே வாக்குறுதி வாங்கிக்கொண்டு உண்மையைக் கூறுகிறாள். இராமன் தன் மீது கைகேசி ஐயமுற்றதற்காக வருந்துவது போலும பாசாங்கு செய்கிறான். அவனுடைய மனம் அவனுடைய முடிசூட்டுக்குக் கேடு வந்ததை எண்ணியெண்ணி வருந்தியது. ஆனால் அவன் மிகவும் தந்திரசாலியாதலின் தன் வருத்தத்தை ஒரு சிறிதும் வெளிக்காட்டாது மறைக்கிறான்.

'கைகேசி அன்றே பரதன் முடிசூட வேண்டுமென்று கூறினளாதலின் எப்படியும் பரதன் அன்று வந்து விடுவான், அவன் அன்று வந்துசேர அவள் முன்னேற்பாடு செய்திருக்க வேண்டும். அதனால் அவன் வரும்வரை ஏதாவது சாக்குக்காட்டிக் காடேகாமல் தாமதித்து விட்டால் அவன் மிகவும் கள்ளங்கபட மற்றவனும் சூது வாது தெரியாதவனுமாதலின் எப்படியாவது தனக்கு நாட்டினைக் கொடுத்து விடுவான்' எனத் தந்திரமாக எண்ணிய இராமன், "பரதனுடைய முடி சூட்டைப்பற்றித் தசரதன் என்னிடம் ஏன் கூறவில்லை" என்று கேள்வி கேட்கின்றான். ஆனால் தந்திரசாலியாதலின் தான் காடேகுவதில் தடையில்லை யென்றும் கூறிக்கொள்கிறான்.

தான் செய்த சூழ்ச்சியெல்லாம் வீண்போயிற்றேயென்று சிந்தித்தபோது இராமனுக்கு அளவிலடங்கா ஆத்திரமுண்டாகிறது. அதனால் வெறுப்பையும் காட்டி "அம்மா! பரதன் என் மனைவியைக்கேட்டாலும் அவனுக்குக்கொடுத்து விடுவதில் தடையில்லை, அப்படியிருக்க இவ்வரசாட்சி ஒரு பொருட்டா" என்று கூறுகிறான். இக்கூற்று மிகவும் ஆத்திரமும் அகங்காரமும் கொண்டு அரசாட்சி கிடையாது போயிற்றே என்ற பெருங்கவலையிற் கூறிய கூற்றாகுமேயன்றி உண்மையுடையார் கூற்றாகுமா? தன் தம்பியாகிய பரதனுக்குப் பெண்டாட்டியைக் கொடுப்பதிலும் தடையில்லையென்கிறானே இராமன். அந்தோ, இவன் தன் மனநிலையை என்னென்பது? பரிதாபம்! பரிதாபம்! காடு கிடைக்கவில்லை உரிமையற்ற தனக்கு, உரிமையுள்ள பரதனுக்குக் கிடைக்கப்போகிறது என்ற செய்தியைக்கேட்டால் இவ்வாறெல்லாமா பேசுகிறது? இவ்வளவு இழிவுள்ள இராமனை தெய்வமாக வணங்குகின்றனர், தமிழ் மக்களிலும் சிலர்! இவனுடைய இழி செயல்களை யெல்லாம் மறைத்துத் தமிழுலகத்தை ஏமாற்றினரே பாபியாகிய கம்பர்! கம்பர் முன்னிலையிற் சுயநலமே நின்றது.

இராமனுடைய சூழ்ச்சிகளையும் மனநிலையையும் அறிந்த கைகேசி அவனை ஒரு சிறிதும் தாமதியாமல் காட்டுக்குப்போக வேண்டுமென்று அவசரப்படுத்துகிறாள். அதனால், தான் அப்போது எண்ணிய சூழ்ச்சியும் வீண்போவது கண்டு பெரிதும் வருத்தமடைந்த இராமன் ஏக்கம் பொறுக்கமாட்டாமல் தன்னை மறந்து பேசிவிடுகிறான். அதனால் அவன் உள்ளக்கிடை முழுதும் வெளியாகிறது. அதாவது "எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை" என்பது போன்ற ஒரு பழமொழிக்குத் தகுந்த எடுத்துக்காட்டாக அப்போது இராமன் ஆகிறான். அது இராமன் அச்சமயம் பேசிய பேச்சு வரலாற்றில் உள்ளதெனினும் தெள்ளிதின் உலகத்தாரறியுமாறு மறுபடியும் இங்கே குறிப்போம். அப்பேச்சு வருமாறு "அம்மா! குடிகளை என் வசப்படுத்தி அரசாள முயல எனக்கு எண்ணமில்லை. அவ்வாறு எண்ணித் தாங்கள் வருந்த வேண்டாம். நான் தாமதித்திருந்தால் ஒருவேளை பரதன் எனக்கு அரசைக்கொடுத்து விடுவானோ என்று அஞ்சுகிறீரோ?"

மேலேகண்ட பேச்சினால் இராமன் சிந்தனை பின்வருமாறு சென்றதாகும். குடிகளை வசப்படுத்தி ஏமாற்றி அரசைப்பெற நினைத்தது வீண் போயிற்று. மேலும் குடிகள் உண்மையில் அரசுக்குரியவன் பரதனே என்பதை உணர்வார்களேயானால், அவர்கள், பரதனை வஞ்சித்து இராமன் அரசாளச் சம்மதிப்பார்களா? ஒரு காலும் சம்மதியார். மேலும் தங்களை ஏமாற்றிய தீய செய்கைக்காகவும் பரதனை வஞ்சிக்கத் துணிந்தமைக்காகவும் இராமன் மீதும் தசரதன் மீதும் அளவிலடங்காத சினங்கொண்டு தீமை செய்யவும் துணிவர். இவ்வளவு தூரம் நிகழ்ச்சிகள் விளைந்த பின் இராமன் முடிசூடுவதும் முடியாத காரியம். பரதன் முதலியோர் வருகையை அவன் அன்றே எதிர் பார்த்தமையின் அவனுக்கு வேண்டியவர்களால் எப்படியும் உண்மை வெளியாகாமற் போகாது. ஆகலின் இனி முடிசூட்டிக்கொள்ள முயலுதல் அறிவீனமெனத் துணிந்த தந்திரசாலியாகிய இராமன் பரதன் வரும் வரை தாமதிக்கத் துணிகிறான். பரதன் வெள்ளறிவாளனாதலினாலே எப்படியும் அரசைத் தனக்குத் தருவான், தான் தந்திரமாக அவனை நேரில் ஏமாற்றி அரசைப் பெறுதலே அதற்கு வழி என்று முடிவாகத் தீர்மானிக்கிறான். அத்தீர்மானமும் நிறைவேறாதபடி கைகேசி மிகவும் அவசரப்படுத்திக்காடேகக் கூறியதனாலேயே "நான் தாமதித்திருந்தால் பரதன் ஒருவேளை எனக்கு அரசைக் கொடுத்து விடுவானோ என்று அஞ்சுகிறீரோ!" என்று வினவுகிறான். உண்மையில் இராமன் தாமதித்ததற்கும் கைகேசி அவனைத் தாமதிக்கவிடாமல் அவசரப்படுத்தியதற்கும் அதுவே காரணமாகும், பரதனுடைய குணத்தையும் மனநிலையையும் இராமனும் அறிவான், கைகேசியும் அறிவாள்.

பரதன் வரும்வரை தாமதிக்கலாமென நினைத்த தன் முயற்சியும் பாழாவது கண்ட இராமன் 'எப்படியாவது பரதன் தன்னைக் காணவருவான், அப்போது அவனை ஏமாற்றி அரசாட்சியைப் பெறலாம்' என்ற துணிவு கொண்டு இருந்ததனாலும், அப்போது காடேகாமல் நிற்பது தன் எண்ணங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும் இடையூறாகுமெனத் தீர்மானமாகத் தெரிந்தமையாலும் இராமன் உடனே காடேகத்துணிகிறான். இவ்வுண்மையை இதனைப்படிக்கும் எமது உடன் பிறப்பாளர் மறவாது மனதிற் கொண்டிருக்குமாறு வேண்டுகிறேன், ஏனெனில் இச்சூழ்ச்சியும் எண்ணமுமே இராமன் பின்னர் செய்யப்போகும் செயல்களுக்கெல்லாம் காரணமாக முன்நிற்பதாகும்.

இனி, கம்பர் புரளியைக் காண்பாம். வால்மீகி கூறியுள்ளபடி கிழவர்கள் பிரம்பேந்தி நின்ற மையையும் அவர்கள் இராமனைக் கட்டியணைத்து மடிமீதிருத்தும் செயல்களையும், அச்செயலுக்கிணங்கியிருந்த இராமன் சீதையினுடைய காலைத் தொட்டு விடைபெற்றமையையும் கம்பர் முற்றிலும் மறைத்தார். இலக்குவன் இராமனைப்பாதுகாத்துப் பின்னே வந்தமையையும் பிற்பாடு இராமன் கோசலை வீட்டுக்குப் போகும் போதும் இலக்குவன் அவன் கூடவே வந்தமையையும் கம்பர் கூறவில்லை,

இராமன் நேரே தசரதனிருக்குமிடத்தை யடைந்ததாக வால்மீகி கூற, கம்பரோ, முதலில் இராமன் "மன்னனுறை கோவில் புக்கான்" பின் "சிற்றவை கோவில் புக்கான்" என்றும் "அண்ணலும் அடர்ந்து தேருந் தூயவனிருந்த சூழல் தருவினன் வருதல்" என்றும் கூறுகிறார். இது அறிவுக்குப் பொருத்தமற்ற கூற்றுமாகும், சுமந்திரன் சிற்றவை கோவிலில் அவளுடன் இருந்த தசரதன் அழைத்ததாகக் கூறக்கேட்ட இராமன் இவ்வாறு தேடிக் கண்டு பிடித்து வந்தான் எனல் அறிவுக்குப் பொருந்திய கூற்றாமா? அழைத்துவரப் போன சுமந்திரன் கொண்டுவந்து விடாமல் அவ்வளவில் ஒழிந்தனனோ?

அதன்பின் நிகழ்ந்தவைகளாகிய இராமன் தசரதனையும் கைகேசியையும் பணிந்ததையும், இராமனுடைய தந்திரப்பேச்சுக்களையும், கைகேசி அவனிடமும் வாக்குறுதி பெற்று உண்மையைக் கூறியதையும், மூர்ச்சித்துவிழுந்த தசரதனை இராமன் தூக்கியதையும், அவன் தாமதிக்க முயன்றதையும், கைகேசி அதைத் தடுத்து அவனைக்காடேக அவசரப்படுத்தியதையும், அவன் போகும் போது பெண்கள் தசரதனை இகழ்ந்ததையும் முற்றிலும் கம்பர் மறைத்து விட்டார். இராமன் வருவதைக்கண்ட கைகேசி அவன் தசரதனைப்பார்க்காதபடி தடுத்தற்காக தானே முன்னேறி வெளிக்கட்டுக்கு வந்து அவனைக்கண்டு பரதன் நாடாளவும் அவன் காடாளவும் தசரதன் உரைத்ததாகக்கூறியதாகவும், உடனே இராமன் அதற்கு இணங்கி,

> "மன்னவன் பணியன்றாகில் நும்பணி
> மறுப்பனோ என்
> பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன்
> பெற்ற தன்றோ
> என்னினி யுறுதி யிப்பால் இப்பணி தலைமேற்
> கொண்டேன்
> மின்னொளிர் கான மின்றே போகின்றேன்
> விடையுங்கொண்டேன்"

எனக்கூறி அவளடி பணிந்து போற்றி தன் தந்தையின் அடிகளைத் திசைநோக்கிக் கும்பிட்டுச் சென்று கோசலை அரண்மனையை யடைந்தான் எனவும் கம்பர் கூறுகிறார். இவ்வாறு வால்மீகி கூறிய உண்மையான வரலாற்றை மறைத்து மேலே கண்டபடி கம்பர் பொய் கூறியது தசரதனையும் இராமனையும் மிக நல்லவர்களாகக் காட்டவும் அவர்களுடைய இழிவான செயல்களையும் குணத்தையும் மறைக்கவுமே தசரதனும் இராமனும் ஒருவரை யொருவர்பார்க்காதபடியே கூசாமல் பொய்க்கதை கூறிப்போகிறார். இவர் தம் துணிவு என்னே? உண்மையை உணரும் உலகம் இப்பொய்மையாளரும் வஞ்சகருமாகிய கம்பரை இகழாது என் செய்யும்? அதனை உணர்ந்த கம்பரும் "வையமென்னை யிகழவும்" என்று முதலிலேயே கூறுவதாக இவ்வாராய்ச்சி தொடர்ச்சியிலேயே எடுத்துக்காட்டினோம். இனத்துரோகிகளாகிய தசரதனும் இராமனும் போலவே இக்கம்பரும் இனத்துரோகம் செய்தார். தம்முடைய இனமாகிய தமிழ் மக்களை உண்மையை உணரவிடாதபடி பொய்க்கதை கூறி ஏமாற்றி தமிழ் மக்களுக்கு நேர்விரோதியான இராமனைத் தமது தெய்வம் போலும் எண்ணச் செய்து விட்டாரே. ஆரியனாகிய இராமன் தமிழ் மக்களுக்கு நேர் விரோதி யென்னும் உண்மைகள் மிகத் தெளிவாக வரவர விளங்கும். இனிமேற் செல்லுதும்.

காரைக்குடி

திரு. ஆ. சோக்கலிங்கன் அவர்களின்

# ஐயவினாக்களுக்கு விடை.

அன்பு மிக்க ஐய,

தாங்கள் 25—11—28-ந் தேதி "குடி அரசு"ல் வெளிப்படுத்திய "சில ஐயவினாக்கள்" என்ற தலைப்பின் கீழுள்ள வினாக்களைக் கண்ணுற்றேம். எமக்குத் தாங்கள் எதிர்பார்க்கிறபடி பிரபல ஆராய்ச்சி யொன்றுமில்லையேனும் தாங்கள் அன்புடன் விடுத்த வினாக்களுக்கு விடையெழுதும் கடமையுடையேமாதலின் எமக்குப் புலப்பட்ட சில காரணங்களைக் கீழே எழுதுகிறோம்.

(1) இராமாயணம் இந்தியாவில் நடந்ததொரு வரலாறெனவே சமயப்பற்றுடையாரனைவரும் உணர்கின்றனர். ஆனால் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் அக்கதையின் காலத்தை வரையறுக்கப் போதிய சான்றுகள் கிடையாமையினாலே அது நடந்த தொன்றன்று என முடிவு கட்டுகின்றனர். இது நடந்ததில்லையென்று முடிவு கட்டுவதற்குத் தகுந்த காரணமாகாது. நடந்ததில்லையென்பதை நிலைநாட்டுவதற்குத் தகுந்தமுதலைக் காரணங்கள் கிடைக்கும் வரைபொது மக்கள் ஆராய்ச்சிக்காரர் கூற்றை நம்பார்.

(2) இராமாயணத்தைக் கட்டுக்கதையெனக் கொண்டாலும் அது இராஜாம்பாள் நாவலைப்போன்ற தன்று. இராஜாம்பாள் கதை கட்டுக்கதை யென்பதைச் சிறுவரும் உணர்ந்துளர். இராமாயணத்தையோ உண்மையில் நடந்ததெனவும் அதில் கூறியிருக்கும் இராமன் திருமாலாகிய தெய்வத்தின் தோற்றமென்றும் ஆரிய மக்களும் தமிழ் மக்களில் ஒரு சாராரும் உண்மையில் நம்பி இராமனைத் தெய்வமாகவே வழிபடுகின்றனர். அரசர்களெல்லோரும் திருமாலின் அமிசமாகவே கூறப்பெறுகின்றனர். தற்காலத்தில் இந்தியாவை அரசாண்டு வரும் ஐந்தாம் ஜியார்ஜ் மன்னரும் திருமாலின் அவதாரமாகவே அவர் மேலே புகழ்மாலைபாடிய ஓர் (ஐயங்கார்) கவிஞராலே புனைந்து கவிமாலை பாடப்பெற்றுள்ளார். திருமால் காப்புக் கடவுள் என்பதனாலே உலகத்தில் துன்பம் மிகும்போது அரசனாகத் தோன்றித் துன்பங்களை நீக்குகின்றான் அது கொண்டு இராமன் என்ற ஓர் மன்னன் தோன்றின போது, தமிழ் மக்களாகிய தங்கள் பகைவர்களோடு சண்டையிட்டு அவன் வென்று தங்களுக்கு வந்த துன்பங்களைத் தீர்த்தமையாலே ஆரியர் (வால்மீகி) அவ்விராமனைத் திருமாலின் அவதாரம் (பிறப்பு) என்று கதைபாடினர். அதன் மேல் அவ்வாரியப் புலவராகிய வால்மீகி மேலும் அக்கதையை விவரித்து திருமாலிடம் தேவர்கள் சென்று அசுரர்களால் தமக்கு விளைந்த கேடுகளைக் கூறி முறையிட்டதாகவும் திருமால் அவர்கள் வேண்டுதலுக்கிரங்கி பூமியில் வந்து தசரத மன்னனுக்கு மகனாய்ப் பிறந்து அசுரரை வென்றானென்றும் தமது நூலில் கூறுகிறார். இன்னவை ஓர் சில நடந்த வரலாற்றை இவ்விதமாக விவரித்துக் கதையியற்றினர் வால்மீகி என்பதே அறிஞர்பலரின் துணிவாக விருக்கின்றது.

(3) பொன்மயமாக விளங்குகின்ற பாண்டியர்களுடைய தலைநகரமான கபாடபுரத்தைப்பற்றி, வால்மீகி முனிவர், அநுமனை நோக்கிக் கூறிய சுக்கிரீவன் கூற்றாகச் சீதையைத் தேடவிட்டபோது கூறுசிறபடியால், இடைச்சங்க காலத்தில் இவ்வரலாறு நடைபெற்றிருக்கவேண்டும், அதாவது இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரிருக்கலாம் எனச் சில அறிஞர் கூறுகின்றனர். இதைப்பற்றிப் பின்னர் இராவணனைப்பற்றி ஆராயும் போது விவரமாக ஆராய்வோம்.

(4) இவ்வரலாறு பெரும்பாலும் வால்மீகி முனிவர் கூறுமாறே நடைபெற்றிருக்கவேண்டும். அவரே முதன் முதல் இராம கதையை எழுதினவர். ஆனந்த ராமாயண முதலியன வெல்லாம் பின்னர்த் தோன்றியவைகளே. கம்பர் தமது இராமாயணத்தை யாவருக்கும் முதல்வராகிய வால்மீகி கூறுமாறே தாம் பாடுவதாகக் கூறுகிறார்.

(5) நமது அன்பரவர்களுடைய முக்கிய நோக்கம் இவ்வைந்தாவது ஐயவினாவேயாகும். கம்பரைப்பற்றி நாம் குறைகூறுதல் அவரிடத்துப் பற்றுடையார் சிலருக்குச் சிறிது வருத்தத்தை உண்டாக்கலாம். தமிழுலகத்தில் பெரும்பாலும் கம்பருடைய இராமகதையை உண்மையில் நடந்த தொருவரலாறு என்று கொண்டே படிக்கின்றனர். நமது நண்பரவர்களைப் போன்ற சிலர் அக்கதையில் கொஞ்சமும் நம்பிக்கையில்லாமல் கம்பருடைய கவி இனிமையை நுகர்வதற்காகவே அந்நூலைப் படிக்கின்றனர் என்பதும் உண்மையே. இத்தகைய நோக்கமுடையார் நமது தமிழ் நாட்டில் விரல் விட்டு எண்ணியறியக் கூடிய அளவிலேயே உளர். இத்தகையோர் இவ்வுலகத்திலேயே கணக்கிட்டால் ஒரு பதின்மரேனும் இருப்பரோ என்பது ஐயமே. ஆதலின் கம்பர் கவிதையை உண்மையே எனவும் தம்மவர் சரிதமெனவும் மயங்கிக்கிடக்கும் தமிழுலகத்துக்கு உண்மையை எடுத்துக்காட்டவேண்டுவது ஒவ்வொரு உண்மைத் தமிழ் மகனுக்கும் இன்றியமையாக் கடமையாகிறது.

இராமயணத்திற் கூறப்பெறுவதெல்லாம் ஆரிய மன்னனாகிய இராமன் தமிழரசரை வென்ற வரலாறுதானே. இந்நூலில தமிழ் மகனாகிய வாலியையும் அவனைச் சேர்ந்தோரையும் குரங்குகளெனவும் இராவணேச்சுரன் முதலிய பெருந் தமிழ் மக்களை அரக்கர்களெனவும் மிகவும் இழிவு படுத்திக்கூறியிருக்கும் உண்மைகளை எல்லாம் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ளவேண்டாவோ? இராமன், தசரதன், கோசலை, வசிட்டன், சுமந்திரன் முதலியவர்களை யெல்லாம் நம்மவர்கள் என்றெண்ணி ஏமாந்திருக்கும் தமிழ் மக்களனைவரும், மேலே குறித்த பேர்கள் மிகவும் தீயவர்கள், தமிழ் மக்களாகிய தங்கள் முன்னோர்களைச் சீரழித்தவர்கள் என்ற உண்மைகளையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டாவோ? இவ்விதமாக உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்பதே நமது ஆராய்ச்சியின் நோக்கம்.

உண்மைகளெல்லாம் இப்படியிருக்க இவ்வுண்மைகளையெல்லாம் மறைத்தும் மாற்றியும் கம்பர் தமது காலத்திருந்த சில ஆரியரிடம் நற்பெயர் பெற விரும்பியோ வேறு எச்சுயநலங் கருதியோ பாடல்களைத் தமிழிலே பாடியிருக்கிறார் என்ற உண்மையையும் தமிழ் மக்கள் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டாவோ? ஆரிய மக்களாவது இக்கதையைப் பெரும்பாலார் அறியாதவடமொழியில் எழுதிவைத்திருந்தனர். அதனால் அது தமிழ் மக்களிடைப் பெரிதும் பரவாதிருந்தது. அதைத்தமிழில் பாடுகிறேனென்று கூறிக்கொண்டு வேறு விதமாகக் கம்பர் பாடியதனாலேயே தமிழ் மக்களிடை இக்கதை கம்பர் பாடியவாறு பரவுவதாயிற்று. தையை இராவணன் தொட்டுத்தூக்கிப்போனான் தசரதன் இராமனை மாட்டித்தனமா அரசை அபகரித்து ஆளத்தூண்டினான் என்ற செய்திகள் வால்மீகிகூறியவை இவைகளைத் தமிழ் மக்களிற்பெரும்பாலோர் அறியார்.

இவைபோன்ற உண்மைகளைத் தமிழ் மக்கள் தெரிந்தால் தற்போதுள்ள கம்பராமாயணத்தால் ஏற்பட்ட கேடு ஏற்பட்டிராது. ஆதலின் தமிழ் நாட்டுக்குப் பெருங்கேடு விளைத்தவர் இக்கம்பரேயாவர்.

இதைப் பொய்க்கதையென்றே கொண்டாலும், இதிலுள்ள கவி நயம் உளதெனச் சிலர் படித்தால் உண்மையறியாப் பொது மக்கள் என்ன எண்ணுவார்கள்? அவர்கள் இக்கதையை உண்மையுடைத்தெனவே மயங்குவர். நஞ்சு குளிர்ந்திருந்தாலும் கொல்லுமல்லவா? அதைப்போலவே மற்றக்கவிதைகளிலும் கற்றோரின் மனத்தைக்களிப்பூட்டும் கம்பன் கவிதை உண்மையில் பெருங்கேடு விளைப்பதாகவே ஆகிறது. ஆதலின் உண்மையில் யாதொரு பயனையும் தாராமல் பொது மக்களறிவை மயக்கி அவர்களுடைய சுயமரியாதைக்கே பெருங்கேடு விளைப்பதாகிய இக்கதையைப் படித்தலே தீமையுடைத்தாம். இராமயணத்தின் உண்மையைத் தமிழ் மக்களனைவரும் தெரிந்துகொள்ளுமாறு நமது அன்பரைப் போன்ற அறிஞர்கள் செய்தல் வேண்டும். பேரறிவாளர்கள் இதனைச் சிந்திக்கவேண்டும். தமிழ்நாட்டுக் கதைகள் பல மலிந்து கிடப்பவும் அவைகளில் ஒன்றையேனும் பாடாது, தமது இனத்தை வேராறுத்து இழிவு படுத்தும் அந்நியராகிய ஆரியர் கதையைப் பாராட்டிப்பாடி அதிலும் உண்மைகள் பலவற்றை மாற்றி மறைத்துப் பெருங்கேடு விளைத்தாரே கம்பரென்ற வருத்தத்தைத் தவிர வேறு அவரிடம் எமக்கு வருத்தமொன்றுமின்று. நமது பெரியார் திரு. ஆ. சொக்கலிங்கனவர்களுக்கு எமது நன்றி உரியது.

## தஞ்சை பார்ப்பார் மகாநாடு.

திவான பகதூர் டி. ஆர். ராமச்சந்திர ஐயரின் தலைமையின் கீழ் தஞ்சை ஜில்லாப் பார்ப்பனர்கள் கூடுவார்கள். ராவ்பகதூர் என். கிருஷ்ணசாமி ஐயங்கார் வரவேற்புத் தலைவராய் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். டிசம்பர் 15ல் விஷயகமிட்டியினர் கூடி தீர்மானங்களை ஆலோசிப்பார்களாம்.

# "இந்திய மாதா"

(திரு. அய்யாமுத்து எழுதுவது)

(கட்டுரை 7)

## விதவைகள் பரிதாப நிலைமை

இப்பரந்த உலகின் எப்பாகத்திலும் நடைபெறாத கொடுமைகள் இந்நாட்டில் தான் வழங்கப்படுகிறது. இதற்கு அத்தாட்சி வேண்டுமாகில் நீங்கள் வேறொன்றையுந்தேடியலையவேண்டாம். இந்நாட்டிலுள்ள விதவைப்பெண்களின் பரிதாப நிலைமையைக் கண்ணுற்று நோக்குங்கள்.

சிறிய பையனுக்கும், சிறிய பெண்ணுக்கும் கல்யாணம் நடைபெறுகிறது. பையன் பள்ளியிலிருக்கும்போதே இறந்து விடுகிறான். பெண் தன் தாய் மடியில் தூங்கும்போதே விதவையாகி விடுகிறாள். தீர்ந்தது அத்துடன் அவளது இவ்வுலக இன்பங்கள்! அவளை மற்றவர் கண்ணால்காண்பது அபசகுனம். சுபகாரியங்களில் அவள் தலையிடக்கூடாது. சில வகுப்பார்கள் அவள் தலையை மொட்டையடித்து விடுவார்கள். மஞ்சள் குளிப்பில்லை, நல்ல ஆடையில்லை, ஆபரணமில்லை, புஷ்பமில்லை, வயிறு நிறைய உண்டியில்லை, வீட்டுவேலை மிகுதியால் உறக்கமில்லை, சதா சந்யாசிக்கோலம், நித்தமும் விரதம். இவ்விதம் தேகம் வெளுத்துப்போய் இன்பமென்பதே என்னவென்றறியாத மானிட உருவங்கள் எத்தனைகோடி இருளில் அடைபட்டுக்கிடக்கின்றன! அந்தோ!

ஐந்துவயதில் ஒரு பையன் கல்யாணம் செய்யலாம், இருபது வயதில் அவன் மனைவியை அடித்துத் துரத்திவிட்டு மற்றொரு கல்யாணம் செய்து கொள்ளலாம். பத்து பெண் குழந்தைகள் பெற்றபின்னர் ஆண் மகவு இல்லையென்று தனது 60 வயதில் பிறிதொரு இளங்குமரியை விவாகமுடித்துக் கொள்ளலாம். ஆணாய்ப் பிறந்தவனுக்கு இந்நாட்டில் இவ்வளவு சௌகரியங்களுமுண்டு. ஆனால் பெண்ணுக்கோ ஐந்தில் அறுத்தாலும் ஆறில் அறுத்தாலும் தான்சாகும்வரையில் தன்னைப்போல் மற்றவர்கள் இன்பங்களை அனுபவித்துக்கொண்டிருப்பதை சதா காலம் பார்த்துக்கொண்டு தனது ஐம்புலன்களையும் அடக்கிக்கட்டி, உலகத்தையும் உலக போகங்களையும் மறந்து, குருடாய் ஊமையாய்ச் செவிடாய் உயிரற்ற பிணமாய் பிறருக்குழைத்து உயிர்துறக்க வேண்டுவதே அவள் "கேட்டுவந்த வரம்."

"இந்துக்களுடைய விவாகத்தில் தலையிட்டால் இந்து சமூகமே கெட்டு இந்துமதமே பாழடைந்துவிடும்" என்றார் நமது சத்தியமூர்த்தி. "பெண்ணுக்கு பத்துப்பனிரண்டு வயதாகுமுன்பே கல்யாணம் செய்துவிடவேண்டும். இல்லையேல் பாபம்வந்து சூழுமென்று பாராசர் எழுதியிருக்கிறார். நாங்கள் பாபத்துக்கு பயப்படுவோமா, உங்கள் தண்டனைக்குப்பயப்படுவோமா"வென இணக்கவயதுக் கமிட்டியின் முன்வாதித்தார், இந்தச் சத்தியமூர்த்திகள் நடப்பதெல்லாம் பாராசர் கட்டளைப்படியே இருப்பின் நமக்கு வருத்தமில்லை. ஆனால் இவர்கள்மட்டும் இவ்விஷயத்தில் விவரிக்கமுடியாத பற்பல விதமான காரியங்களை பாராசர் கட்டளைக்கு மாறாகச்செய்து கொள்ளலாம். அதனால் இவர்களுக்குப் பாபம் சூழவில்லை. ஆனால் பெண்களுக்குச்சரியான வயதுவந்த பின்னர் மணமுடிப்பதில் தான் பாராசர் ஞாபகம் வருகிறதென்றால் இதைப்போல் மோசமானவாதம் வேறொன்றுண்டாவென யோசியுங்கள். அதாவது தங்கள் வகுப்பாராகிய ஆண்கள் நடந்துகொள்ளவேண்டிய விஷயங்களுக்கு ஸ்மிருதியும் சாஸ்திரமும் கட்டுப்படத் தக்கதல்ல, ஆனால் பெண்கள்மாத்திரம் அவைகளை முக்கியமாகப் பின்பற்றவேண்டுமாம். பிறகு "பெண்கள் பக்குவமடையுமுன்பே மணமுடிக்காவிட்டால் "கற்புநிலை" தவறிவிடுவார்களென்றார் மற்றொரு பார்ப்பன சாஸ்திரியார். அப்படியானால் இளமையிலேயே விதவையாகிவிட்ட இவர்கள் பெண்களின் கற்பை இவர்கள் எவ்வண்ணம் காத்து வருகிறார்களென பிறநாட்டார் நகைக்கமாட்டார்களா? இவர்கள் "கடவுள்களா" இவ்வேழை விதவைகளின் கற்பை ரட்சிக்கின்றன?

வீட்டில் ஒரு அறையில் விதவைப்பெண்ணின் தாயும் தகப்பனும் துயிலுவார்கள், மற்றொரு அறையில் அண்ணனும் அண்ணியும் துயிலுவார்கள், மூன்றாமறையில் தமக்கையும் அவள் கணவனும் துயிலுவார்கள். இவர்கள் மத்தியில் இவ்வேழை விதவை நாடோறும் தவமிருக்கவேண்டும்! ஹா! ஹா! இந்தியாவின் சக்தியே! இந்துமதமே! ஸ்மிருதியே! சாஸ்திரமே! இதுவோ உங்கள் நிலைமை!

விதவையானபெண் தன்புருடன் வீட்டில் இருக்கலாம். ஆனால் அங்கு அவள் எல்லோருக்கும் பணியாளாகவே இருக்கவேண்டும். அதிகாலையில் அனைவருக்கும் முன்னதாக எழுந்து வாசல் பெருக்கி நீர் தெளித்து வீடுமெழுகவேண்டும். பாத்திரம் துலக்கவேண்டும், தண்ணீர் எடுக்கவேண்டும். சமையல் செய்யவேண்டும், துணிகள் கசக்கவேண்டும். இரவில் எல்லாரும் துயிலுற்றபின் அதாவது மற்றவர்கள் ஜோடிஜோடியாய் தங்கள் தங்கள் அறைகளுக்குள் படுத்துறங்கப்போவதைப்பார்த்து துயில வேண்டும். வீட்டில் வாழ்க்கையில் இவர்களுக்கு வேறு எவ்விதமான சுதந்திரமும் இன்பமும் கிடையாது. என்னே இவர்கள் "தலைவிதி"

புருடனுடன் பிறந்தவன் சிறிது முரடனாகவிருக்கலாம். அவனுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய இவள் பிரியமற்றவளாகவிருக்கலாம். அல்லது வீட்டிலுள்ள மாமி இவள்மீது கோபங்கொள்ளலாம். உதாரணமாக, "ஏன் ஜன்னல்கதவைத் திறந்துபார்த்தாய்? வீதிக்கு ஏன்போனாய்? மாடியின்மீது உனக்கு என்னவேலை? என்று மாமன் மாமி கொழுநன் உரைக்கலாம். இவைபொறுக்க மாட்டாமல் இவ்விதவை தன் 'கொண்ட'விடம்விட்டுதானபிறந்தவிடம்நாடலாம். தனது தாய்தந்தையர்கள் ஏழையாகவிருப்பின் இவள்தனது புருடன் சொத்தில் வரும் வருவாயில் சிறிதளவு தனது காலட்சேபத்துக்காகக் கேட்டுமறுக்கப்படலாம்; இவள் நியாயஸ்தலத்தில் வழக்குத்தொடரலாம். இவ்வழக்கில் இவளுக்கு உதவிசெய்ய இவளுடைய தங்கை புருடனோ, தமக்கை புருடனோ, தாயுடன் பிறந்த மாமனோ, வேறு உறவினனோ முற்படலாம். உடனே கோர்ட்டில் இவளுடைய ஜீவனாம்சத்துக்குத்தடையாக இவள் "பதிவிரதா தர்மம்" கெட்டுவிட்டாளென சாட்சிகள் விடுத்து இப்பெண்ணை அவதூறுபடுத்தி வாதிப்பார். இவ்வளவு கதைகள் நடந்து சிறிது ஜீவனாம்சத்துடனே அல்லது சிறிதும் அங்கு மார்க்கமில்லாமலோ தாய்வீடு வந்து சேர்ந்தபிறகு அங்கு தன் அண்ணன் தம்பி ஆகியவர்களின் காருபாருகளும் அவர்களது பெண்சாதிகளின் கொடுமைகளும் அங்கு இவள் செய்யவேண்டிய வேலைகளும் கொஞ்சமல்ல. என்னே இப்பெண் செய்த "பாக்கியம்".

பிறகு, இயற்கையாய் எழும்படியான உணர்ச்சியை அடக்கமுடியாது பலக் குறைவினாலோ அல்லது அண்டை அயல் வீட்டு வாலிபன் செய்யும் அட்டகாசத்தாலோ அல்லது வேறு நிர்ப்பந்தத்தாலோ ஏதாவது பிரசவித்து ஊருக்குபயந்து தனது சிசுவை விட்டெறிந்து, தப்பிக்கத்தெரியாமல் அகப்பட்டுக் கச்சேரிகளில் இச்சைபெறும் 'அபாக்ய' விதவைகளின் சரித்திரங்களும் பல வாலிபர்களால் வெளியேற்பட்டு ஊரைவிட்டும் நாட்டைவிட்டும் ஓடிப்போனதாக வெளியாகும் கைதிகள் வரலாறும் காலந்தோறும் தினசரிப்பத்திரிகைகளில் வெளியாகின்றதை பார்த்திருக்கலாம்.

பிறகு, கருவைச்சிதைக்க மருந்து (விஷங்கள்) உட்கொண்டு அதனால் கஷ்டம் ஏற்பட்டு சதாநோயோடு வாழும் பெண்களின் பரிதாபமும் கொஞ்சமல்ல. இம்மாதிரியாக பெண்களின்மீது இவ்விதவிதவைத்தன்மையைப்போட்டு நீங்கள் அழுத்திக்கொண்டிருப்பதால் உங்கள் இந்துசமூகமும் அதற்காதாரமான மதமும் எவ்வளவுதூரம் அழுகிப்புழுத்து நாற்றமெடுத்துள்ளதென்று நீங்கள் அறியாமல் இளம்விவாஹமே இளம் விதவைக்கு காரணமென்று உணராமல், விவாக விஷயத்தில் தலையிட்டு விவாக வயதையோ விவாக கொள்கையையோ மாற்றினால் இந்துமதமும் சமூகமும் பாழ்பட்டு விடும் என்று சொல்லக்கூடிய கொள்கைகளும் சாஸ்திரிகளும் இந்நாட்டில் உயிர்வாழ்ந்திருப்பதை நீங்கள் இனியும் சகித்துக்கொண்டிருப்பதை என்னென்றுரைப்பது!

ஒருபெண் ஒருவனை மணந்தவுடன் தனது ஆயுள் பரியந்தம் அவனுக்கே மனைவியாகிவிட்டாளாம். ஆகலின் அவன் இறந்தாலும் பிறிதொரு ஆடவனை மணம்செய்து கொள்ளக்கூடாதாம். மற்றும் கணவன் இறக்கும்போதே மனைவியும் "உடன்கட்டை" யேற வேண்டுமாம். இது இந்துமதத்தின் அச்சும் ஆணியும்போன்ற லட்சியமாம்! ஆங்கில அரசாங்கத்தார் இந்தச் "சதி"யை நிறுத்தியது பெரும் பிசகேயாகும். இச்சதியை நிறுத்தாமலிருந்திருந்தால் இந்நாட்டில் தற்போது வதியும் 26834838 விதவைகள் அல்லல் படவேண்டியதிருக்காது. பெரும்பாலர் செத்துத்தொலைந்தாவது இருப்பார்கள். செத்தால் ஒரு நாள் அழுகையும் துக்கமும். இவர்கள் சாகாது வேதனைப் படுவதா

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

# நாஸ்திகம்.

துய வெழிலழகனர் எழுதி
சித்திரபுத்திரன் திருத்தியது.

மகன் - அம்மா! இதென்ன விபரீதம்? நமது தந்தை சதா சர்வகாலம் "குடி அரசு" "குடி அரசு" என்று 'குடி அரசு'ம் கையுமாகவே இருந்து சதா காலம் படித்துக் கொண்டு வந்தது போதாமல் இப்போது "குடி அரசு" ஆபீசுக்கே போய்ச்சேர்ந்து விட்டாரே இதென்னம்மா! அநியாயம்! அவருக்கு நாஸ்திகம் தலைக்கேறி விட்டது போல் இருக்கின்றது.

தாய் - மகனே! இவ்வாறு கேட்பதற்குக் காரணமென்ன? "குடி அரசு" பத்திரிகை நாம் இழந்த சுயமரியாதை, அறிவு, செல்வம், நாடு ஆகியவைகளை மறுபடியும் பெறுவதற்கு வேண்டிய வேலை என்ன? என்ன? செய்ய வேண்டுமோ அவைகளை உயிருக்குத் துணிந்து செய்து கொண்டும், மனிதர்களுக்குள் பரவி நிற்கும் மூட நம்பிக்கைகளை ஒழிக்கவே இவ்வுலக மெங்கணும் வெற்றிக் கொடியோடு உலவிக் கொண்டும் வருகின்றது. உமது தந்தை அக்'குடி அரசின்' கொள்கைகளை நன்கு அறிந்தவராதலால் நான் தான், அங்கே போய் அதற்கு ஏதாவது உதவி செய்யலாமே எனக்கருதி போகும்படி சொல்லி அவரை அங்கு அனுப்பினேன். இதிலென்ன அநியாயம்?

மகன் - என்னம்மா! அக்'குடி அரசை' இவ்வளவு மேன்மையாகச் சொல்லிப் புகழ ஆரம்பித்து விட்டாய். வெறும் நாஸ்திகத்தையே போதிக்கும் 'குடி அரசை'ப் பற்றி இப்படிப் புகழுவதோடு அப்பாவையும் அங்கு அனுப்பி விட்டாயே?

தாய் - மகனே நாஸ்திகத்தைப் போதிப்பது 'குடி அரசு' அல்ல, நானும் அல்ல, நீயும் அல்ல, உமது தந்தையுமல்ல, நாம் ஒருவரும் நாஸ்திகரல்ல; இதற்கு யாதொரு சந்தேகமும் படவேண்டாம்.

மகன் - அம்மா! 'குடி அரசை' நாஸ்திகமல்ல என்று எப்படியம்மா சொல்லுவது? சாமியே இல்லை என்று வாரந்தோறும் வெளி வருகின்றதேயம்மா! நீங்கள் படித்ததே இல்லையோ? உலகமெங்கணும் எங்குப்பார்த்தாலும் "குடி அரசு நாஸ்திகத்தைப் பரப்புகின்றது" என்று சொல்லப்படுகின்றதே.

தாய் - அப்பா குழந்தாய்! நீ நல்ல புத்திசாலி, பகுத்தறிவு உள்ளவன், அப்படியிருக்க 'குடி அரசை' நாஸ்திகமென்று சொல்லுதே அம்மா' என்று சொல்லுகின்றாயே ஒழிய நீ எப்போதாகிலும் எங்காகிலும் குடி அரசில் சாமி இல்லை என்று எழுதியிருந்ததைப்பார்த்ததுண்டா? நீயும் வாரந்தோறும் படித்துக் கொண்டு தானே வருகின்றாய், நானும் இடைவிடாது படித்துக் கொண்டு தான் வருகிறேன். ஒரு நாளும் சாமி இல்லை என்ற கட்டுரையைக் 'குடி அரசு' கொண்டு வந்ததே இல்லையே! யாரோ சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு "அம்மா உலகம் சொல்லுகிறதே" என்கின்றாயே உனக்கு அமைந்த அறிவு எதற்காக இருக்கிறதோ தெரியவில்லையே? அய்யோ இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு இப்படித்தானே படிப்பிக்கின்றார்கள்.

மகன் - நான் ஒன்றும் சந்தேகப்படவில்லை, உனது இட்டப்படியே வருகிறேன், சற்று பொறு, நீயும் குடி அரசை படிக்கின்றாயே. சாமி உண்டுஎன்கிறாயா, இல்லை என்கிறாயா? சற்று சொல்லுபார்ப்போம். பிறகு குடி அரசைப் பற்றி பேசுவோம்.

தாய் - மகனே எனது இட்டப்படி ஒன்றும் வேண்டாம், உன் இட்டப்படியே எது வேண்டுமானாலும் கேள். ஆனால் இப்போது கேட்ட கேள்வி உண்டே இது ஒரு நல்ல கேள்வி தான். இதற்காக நான் மெத்த சந்தோஷிக்கிறேன். என்னப்பா! சாமி உண்டா இல்லையா? என்ற கேள்வி தானே கேட்கிறாய்? வேறு ஏதாகிலும் உண்டா?

மகன் - அம்மா! வேறு யாதும் இல்லை. குடி அரசைப் படிக்கின்றவர்களின் மனப்பான்மையை அறிய இது ஒன்றே போதும்.

தாய் - ஆ-ஹா அப்படியா! சரி பதில் சொல்லுகிறேன். பதில் சொல்லுவதற்கு முன்பு கேள்வியை நன்றாய் விளக்கிக் கொள்ள வேண்டாமா? அவசரப்படாதே; நிதானமாய்ப் பேசு. சந்திக்கடைப் பேச்சிலேயே உனது கவனம் சென்று விட்டதே ஒழிய உன் அறிவுக்கு நீ சற்றும் மதிப்புக் கொடுக்கவில்லை என்று தெரிகின்றது. ஆனாலும் குற்றமில்லை- உனது கேள்வி என்ன? 'சாமி உண்டா இல்லையா என்பது தானே?

மகன் - ஆம் அம்மா

தாய் - அப்பா மகனே, சாமி என்றால் என்ன? அதை முதலில் சொல்லு பார்ப்போம். அதாவது அதற்கு பெயர் என்ன? ரூபம் என்ன? நிறம் என்ன? குணம் என்ன? அது என்ன சொல்? சற்று புரியும்படி சொல்லு பார்ப்போம். பிறகு, அது உண்டா இல்லையா? என்பதைப்பற்றி பேசலாம்.

மகன் - என்ன அம்மா உனக்கு இது கூடவா நான் சொல்லிக்கொடுக்க வேண்டும்? பெயரும் உருவமும் குணமும் தோற்றமும் அற்றவனும், புத்திக்கும் மனத்திற்கும் எட்டாதவனும், எங்கும் வியாபித்து சகல உலகங்களையும் படைத்துக் காக்கும் சர்வவல்லமையும் சர்வமும் அறியும் சக்தியும் உள்ளவனும் அவனன்றி ஓரணுவும் அசைய முடியாத ஆதிக்கம் கொண்டவனும் ஆகிய வஸ்து பரம்பொருள் என்றும் அது ஒரு பெயர்ச் சொல் என்றும் நீ அறிந்ததில்லையா? என் தாயே, இந்தக்கேள்வியிலேயே நாஸ்திக வாடை வீசுகின்றதே.

தாய் - குழந்தாய் பொறு பொறு. அவசரப்படாதே. கிளிப் பிள்ளையைப் போல யாரோ சொல்லிக் கொடுத்ததை மனதில்வைத்துக் கொண்டு அர்த்தமில்லாமல் கஷ்டப்படுகின்றாய்.

சாமி என்றால்என்ன என்று கேட்டேன். அதற்கு ஒரு வண்டி சங்கதி சொல்லி விட்டாய். அவைகளில் ஒவ்வொன்றாக கவனிப்போம். நீ நல்ல பிள்ளை ஆனதினால் கேள்விப்பட்டவைகளையும் மற்றவர்கள் சொல்லிக் கொடுத்ததையும் எதிலாவது படித்ததையும மறந்து விட்டதாக நினைத்துக் கொள். குருட்டு நம்பிக்கை முரட்டுப் பிடிவாதம் முதலிய அறிவுக்கு விரோதமான குணங்களை விட்டு விட்டு மாசு மறுவற்ற பரிசுத்தமான மனதோடு நான் சொல்வதை சற்றுக் கூர்ந்துகவனமாய்க் கேள்.

மகனே! நீ, உண்டா இல்லையா என்று என்னைக்கேட்ட சாமி பெயரில்லாதது, உருவமில்லாதது, குணமில்லாதது, ஆனால் எங்கும் வியாபிகதது, புத்திக்கும் மனதிற்கும் எட்டாதது என்று முதலில் சொல்லி முடிவில் அது ஒரு பெயர்ச்சொல் என்றும் சொல்லி இருக்கின்றாய். மத்தியில் உள்ளதைப் பற்றி பிறகு பேசுவோம். பெயர்ச்சொல் என்றால் நாமமோ ரூபமோ குணமோ இருந்தாக வேண்டும்-சரி அது தான் போகட்டும்- வஸ்து என்றால் அதற்கும் ஒரு பெயர் வேண்டும், ரூபம் வேண்டும், குணமும் வேண்டும். அது தான் போகட்டுமென்றால், எப்பேர்ப்பட்ட ஒரு தன்மையைப் பற்றியதானாலும் அது மனதிற்காவது புத்திக்காவது எட்டினதாக இருக்கவேண்டும். எனவே "பேர் இல்லை, குணமில்லை, மனதிற்கும் புத்திக்கும் எட்டவும் முடியாது, அப்படி ஒருவஸ்து இருக்கின்றது, அதை உண்டு என்கின்றாயா இல்லை என்கின்றாயா" என்று நீ என்னைக் கேட்டால் நான் என்ன பதில் சொல்லக்கூடும் என்பது உனக்குத் தெரியவேண்டுமானால், நான் அந்த மாதிரி ஒரு கேள்வி கேட்கிறேன்- அதற்கு நீ என்னபதில் சொல்லுகிறாய் என்று பார்க்கிறேன். அதாவது என்னருமைக் குழந்தாய்! நம்ம வீட்டு பெரிய பெட்டிக்குள் ஒரு வஸ்து இருக்கின்றது, அதற்குப் பெயர் இல்லை, ரூபமும் இல்லை, குணமும் இல்லை, அது உன் புத்திக்கும் மனதிற்கும் எட்டாதது, அது இப்போது இருக்கின்றதா இல்லையா என்று சொல்லு பார்ப்போம்.

மகன்:- என்னம்மா இப்படி கேட்கின்றாய்? நீ சொல்லுகின்றமாதிரி ஒரு சாமான் இருந்திருக்க முடியுமா அம்மா? அப்படியானால் பெட்டிக்குள் ஒன்றுமில்லை என்று தானே அர்த்தமாகின்றது?

தாய்:- ஏனப்பா அப்படிச் சொல்லுகின்றாய்? பெயரும் உருவமும் இல்லாததாலேயே ஒன்றும இல்லை என்று சொல்லிவிடலாமா? குழந்தாய்! நன்றாய் யோசித்துப் பதில் சொல்லு.

மகன்--பெயரும் உருவமும் இல்லாமல் ஒரு வஸ்து இருக்கக்கூடும் என்று என் புத்திக்குப்படவில்லை, மனதிற்கும் எட்டவில்லையே. எப்படியம்மா அப்படி ஒருவஸ்து இருக்க முடியும்?

தாயார் - உன் புத்திக்கும் உன் மனதிற்கும் எட்டாததினாலேயே ஒரு வஸ்துவை நீ இல்லை என்று சொல்லி விடலாமா குழந்தாய்?

மகன் - அந்தப்படி சொல்லி விடக்கூடாது என்றே வைத்துக் கொண்டாலும், நீ கேட்கின்ற வஸ்து யாருடைய புத்திக்கும் மனதிற்கும் படாதது என்று மேலே சொல்லி இருக்கின்றாயே. ஆதலால் வேறு யாருடைய புத்திக்கும் மனதிற்கும் படக்கூடியதாக இருக்கும் என்று நினைத்தாலுங் கூட அது நீ சொல்லும் வஸ்து அல்லாததாய் விடுமே. ஆகையால் நீ கேட்கும்கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டுமானால்

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

## ‘தமிழ்நாடு’ பத்ரிகையின் விஷமம்.

விருதுபட்டியில் திரு சவுந்திரபாண்டிய நாடார் அவர்களுக்குச் செய்த வரவேற்பு திருவிழாவின்போது திரு நாயக்கரைப்பற்றி அற்பத்தனமாகவும் அயோக்கியத்தனமாகவும் ‘தமிழ்நாடு’ பத்திரிகை விஷமப் பிரசாரம் செய்ததைப்பற்றி விளக்கமாக மூன் வியாசங்களில் எழுதிவந்திருக்கின்றேன்.

இப்போது மறுபடியும் அதே ‘தமிழ்நாடு’ பத்திரிகையில் திரு நாயக்கர் எந்த விஷயத்தை மறுக்கின்றார் என்று “ஒரு மறுப்பு” என்ற தலையங்கம கொடுத்து ஒரு வியாசம் வெளியாயிருக்கின்றது. இதை வாசகர்கள் ஊன்றிபபடிக்க வேண்டுகின்றேன்.

அதாவது:—

அந்த வியாசத்தில் 6 விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆறும் மறுக்கத் தக்கவைகளே. முதலாவது அந்த கூட்டத்தில் நடந்த சில்லரைத்தனங்களைப் பொறுக்க மாட்டாமல் சிலர் வெளியேறிவிட்டது பொய்யா? என்று கேட்கிறார்

ஆம் முழுப்பொய். அந்த மீட்டிங்கில் எப்போதாவது அதுவும் குறிப்பாய் நாயக்கர் பேசும்போது எவ்வித சில்லரைத்தனமும் அங்கு நடக்கவில்லையென்றும் அதற்காக எந்த கனவானும் எழுந்துபோகவில்லை என்றும் உறுதியாய்ச் சொல்லுகிறேன். மேல் கண்ட வியாசக்காரர்கள் இதை மறுப்பதானால் அடி சில்லரைத்தனம் இன்னது என்பதை எழுதி எழுந்துபோனவர்களிடம் கையெழுத்து வாங்கி அனுப்புவீரா? அப்போதுதான் வியாசக்காரரோ அல்லது பத்திரிகைக்காரரோ யோக்கியர்களாக மதிக்கப் படக்கூடும்.

இரண்டாவது, கூட்டத்தில் 9 வரவேற்பு என்பது. இது அனாவசியமானது.

மூன்றாவது, நாடார் குலத்தை நாயக்கர் இழிவுபடுத்தி பேசியது என்பது. இது முழுதும் பொய், வெறுக்கத்தக்க பொய்.

நான்காவது, நாடார் மக்கள் திரு நாயக்கரை கேள்வி கேட்கவேண்டுமென்று வெளியில் காத்திருந்தார்கள் என்பது.

இதுவும் பொய்யே. திரு நாயக்கர் வெளியில் சுமார் முக்கால் மணி நேரம்போல் பள்ளிக்கூடத்தின்முன்பும்கடைத்தெருவழியிலும் தனியாக மோட்டார்காரில் இருந்தார். வெளியில் ஜனங்கள் காத்திருந்தார் என்பதில் கடுகளவு உண்மையிருக்குமானால் அவர்களுக்கு நாயக்கர் தென்படாமலிருந்திருக்க முடியுமா?

ஐந்தாவது, மற்றும் நடந்த சங்கதியை மறுக்கிறதா என்பது. மற்றும் நடந்த சங்கதி என்பது என்ன?

ஆறாவது, திரு நாயக்கர்நாடார்களை தீண்டாதவர்கள் என்று சொன்னது. இது எல்லாவற்றையும்விட அற்பத்தனமானது, இழிதகமையானதுமான பொய்! பொய் !!

ஏனெனில், திரு. இரத்தினசாமி நாடார் அவர்கள் வாசகசாலையார் அன்றைய மீட்டிங்கில் பேசியதைப்பற்றி செய்த தீர்மானத்திலேயே “நாடார்கள்தீண்டாதவர்கள்என்று திரு நாயக்கர் சொல்லவில்லை” என்பது நன்றாய் விளங்குகின்றது.

எனவே, அதை பிரசுரித்தவர்கள் யோக்கியர்களாகவோ நாணயமுள்ளவர்களாகவோ இருக்கமுடியுமா என்பதை வாசகர்களே உணரட்டும், அல்லது பிரசுரித்தவர்கள் தங்கள் நிருபர்களை நம்பி பிரசுரித்ததாக ஒரு சாக்கு சொல்லுவார்களானால் அது உண்மையாயிருக்கும் பக்ஷம் பகிரங்கமாய் மறுத்தாவது மன்னிப்பு கேட்டாவது இருக்க வேண்டியது சுத்த ரத்தஓட்டமுள்ள மனிதனின் கடமையா அல்லவா என்பதை வாசகர்களேகவனித்தால்விளங்காமல் போகாது. தவிர‘தமிழ்நாட்டில்’ வெளியான மற்ற விஷயங்களை பொய்யென்று ‘தமிழ்நாடு’வே ஒப்புக்கொண்டு திருடனைத் தேள் கொட்டியது போல் வெட்கப்பட்டு முக்காடு போட்டுக் கொண்டதா இல்லையா என்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக.

அதாவது “திரு நாயக்கர் விருதுபட்டிக்கு அழையா விருந்தாளியாய் வந்தார், மூன்று நாளைக்கு இருக்க வந்தவர் உடனே ஓடிவிட்டார், பயந்துகொண்டு மெத்தைக்கு ஓடிப்போனார், நாடார்களின் திண்டாட்டம், ஒருவருக்கு செருப்படி” என்பதுபோன்ற ஈனத்தனம்கொண்ட விஷயங்கள் எல்லாம் இப்போது என்ன ஆச்சுது? இவற்றை மறுத்து ஆதாரங்களுடன் பலர் “திராவிடனிலும்” “குடி அரசிலும்” எழுதிய மறுப்புகளுக்கு என்ன சமாதானம் சொன்னார்?

இப்படியிருக்க மறுபடியும் இதே தொழிலில் அப்பத்திராதிபர்கள் ஈடுபட்டிருப்பது அவர்களின் அற்ப புத்தியையும் இழி குணத்தையும் காட்டுகின்றதா இல்லையா? திரு வரதராஜுலு போன கூட்டங்களில் அவர் அவமானப்பட்டு வந்து சேருவதும் மிரட்டியவர்களுக்கெல்லாம்பணம் கொடுத்து விட்டு கெஞ்சி தப்பிக்கொண்டு வருவதும் கணக்கு வழக்கில்லை. அவற்றை அநேக தடவை “வண்டுமென்றே ‘குடி அரசும்’ ‘திராவிடனும்’ ‘ஏதோ வயிற்றுப்பிழைப்பு நாடகம் நடந்து போகட்டும்’ என்ற எண்ணத்துடன் மறைத்திருக்கிறது. அப்படி இருக்க பொறுமையிலும் அடக்கத்திலும் ஆகிரத்திலும் இப்பாதிரி நிதானத்தில் இல்லாமல் மனதுக்கு தோன்றியபடி அதாவது ‘திரு நாயக்கர் ஓடி விட்டார்’ ‘செருப்படி’ ‘மறைந்து கொண்டார்’ ‘அழையா விருந்தாளியாய் தானாக வந்து கலந்து கொண்டார்’ ‘நாடார்களை தீண்டாதவர் என்று சொன்னார்’ என்கின்ற வார்த்தைகளை எழுதுவதில் பயன் என்ன? இதிலிருந்து திரு. நாயக்கர் மீது திரு,வரதராஜுலுக்குஇருக்கும் துவேஷமும் பொறாமையும் ஒருவாறு வெளியாவதுடன் நாடார் மக்களையும் பொது ஜனங்களையும் எவ்வளவு தூரம் முட்டாள்கள் என்றும் அறிவில்லாதவர்கள் என்றும் நினைத்து இந்த அயோக்கியத்தனத்தில்பிரவேசித்திருக்கின்றார் என்பதும் யோசித்தால் உண்மை விளங்காமல் போகாது.

திரு. வரதராஜுலுவின் இப்போதைய [illegible] எல்லாம் ‘தமிழ் நாட்டில் மாத்திரம் [illegible] தன் யோக்யதை வெளியாய் விட்டதே ஒழிய மலாய் நாட்டுக்காரருக்கும் தென் ஆப்பிரிக்காகாரருக்கும கொளும்பு சீமைக்காருக்கும் தன்னுடைய வண்டவாளம் இன்னமும் சரியானபடி எட்டவில்லை, ஆதலால் அவர்களிடம்தனது நாடகம்செல்லும்வரை செல்லட்டும் வந்த காசுக்கு வட்டமில்லை என்பது போல் அவர்களையும் ஏய்க்கும் வரை ஏய்க்கலாம், என்று ஒரு விதத்தில் தன்னுடைய விஷமப்பிரசாரத்தை நடத்துகிறார், ஆனாலும் அந்த ஜனங்களும் சிக்கிரத்தில் உண்மையறிந்து தங்களுடைய முட்டாள் தனத்திற்கு வருந்தப்போகிறார்கள் என்பது உறுதி.

“சரித்திரக்காரன்”.

## ஞான சூரியன்

ராமநாதபுரம் ஜில்லாக்கலெக்டர் கனம் மாக்வீன் அவர்களிடமிருந்து ஞானசூரியனைப்பற்றி தேவைகோட்டை சப்டிவிஷனல் ஆபீஸருக்கு ஒரு ரிபோர்ட் வந்திருக்கிறது.

அதாவது:—

Ref புத்தக விஷயமாக:—

சிவானந்த சரஸ்வதியால் எழுதப்பட்டு, காரைக்குடி ஊழியன் அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்ட “ஞானசூரியன்” என்றபுத்தகம்.

மேற்குறித்த‘ஞானசூரியன்’புத்தகம் (கானாடு காத்தான் வயிசு. ஷண்முகஞ் செட்டியாரால் காரைக்குடி ஊழியன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.) அதன் பிரதி ஒன்று இத்துடன் வருகிறது. அடி புத்தகத்தைப்படித்துப் பார்த்ததில் விளக்கமில்லாத பாஷை அதில் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (குறிப்பிட்ட பக்கங்களுக்கு நகல் இத்துடன் வருகிறது.) அதோடு அந்தப் புத்தகம் பொது ஜனங்களிடையில் அடிப்படையான பகைமையும் உண்டாக்கக்கூடியதாகவுமிருப்பதாகத் தெரிகிறது. அச்சிட்டோரிடமும் வெளியிட்டோரிடமும் காரணங்கேட்டு குறிப்புடன் (Remarks உடன்) அனுப்பிவைக்கவும்.

விளக்கமில்லாத பாஷைகள் கண்டுள்ள பக்கங்கள், 66, 67, 87, 88, 115, 116, 118, 119.

மேற்குறிப்பிட்ட ரிபோர்ட்டுக்குக் காரணம் கூறும்படி திருப்பத்தூர் மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்துவந்த சமனுக்கு ஆஜராகி திரு. வயிசு. ஷண்முகம் செட்டியாரவர்களால் எழுதிக்கொடுத்த (Explanation.)

சமாதானம் வருமாறு:—

தங்கள் முன் ஆஜராகும்படி நேற்று எனக்கு கிடைத்த சமனுக்கு நான் தங்களிடம் நேற்று ஆஜராகி நேரில் தாங்கள் கூறியபடி சமனில்கண்ட “ஞான சூரியன்” என்ற புத்தகசம்மந்தமாக இந்தவிபரம் தங்கட்குத்தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

புத்தகத்தினுடைய நோக்கம் எந்தவிதமான பகைமையும் [illegible]இல்லை. மலையாளத்தில் பிறந்து, சமஸ்கிருத பயிற்சிபெற்ற சுவாமி சிவானந்த சரஸ்வதியென்ற ஒருசந்நியாசியால் எழுதப்பட்ட ஒரு தனியான ஆராய்ச்சி நூல் இது. அவர் சமஸ்கிருதத்திலும் மலையாளத்திலும் மிக்க பழக்கமுள்ளவர். அவர் வடநாட்டில் படிப்பை அபிவிர்த்தி செய்து

இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

# சைவ சமயப் புரட்டுகள்.

## பண்டிதரின் முட்டைத்தன்மை.

[புதுவை கண்மணிதாசன் எழுதியது]

### ஒரு நீதி மன்றத்தீர்ப்பு.

தமிழ் நாட்டில் வழங்கும் சைவக் கொள்கைகளின் பித்தலாட்டங்கள் இன்னவை என விளக்கிக் காட்டுவதும், பண்டிதர்கள் முட்டைத் தன்மையை விளக்கிக் காட்டுவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும். மதம் மதம் என்னும் தடிப்பினால் சாம்பலை பூசி உருத்திராக்க வடங்கள் பூண்டு மாமிசம் சாப்பிடாமையினால் சைவர்களென்று தங்களைச் சொல்லிக்கொண்டு சோம்பேறிகளாக வாழ்ந்து பாமரரை ஏமாற்றி வயிறு வளர்க்கும் ஆஷாடபூதிகள் கூற்றுக்களை உலகுக்கு வெளியாக்கவேண்டாமா?

ஓருயிர் ஈருடலாய் ஒரே மனமாய் ஒருவனும் ஒருத்தியுமாய் ஒருவருக்கொருவர் உற்ற துணையாய் இருந்து இயன்ற தொழில் செய்து அறநெறி வழுவாது பொருளீட்டி அளவோடும் நிறையோடும் உண்டு இன்ப வாழ்வில் ஈடுபட்டு உலகத்தோடு ஒட்ட ஒழுகி வாழ அறியாமல், பலர் சோம்பேறிகளாய் உலக இன்பங்களைச் சுலபமாக நுகர்தற்கும், சரீரத்தைப் பருக்கச்செய்வதற்கும் கள்ள வேடம் பூண்டு சந்நியாசி, சாமியார், சாது முதலிய போலிப்பட்டங்களையும் சுமந்து கொண்டு, மண் பொன் பெண் என்னும் மூன்று வகையான ஆசைகளையும் முற்றும் வெறுத்து நீக்கிவிட்டதாக வாய்ப்பறையாகச் சாற்றி, கள்ளத்தனமாய்க் கைம்பெண்கள் காதலராக வாழ்ந்து, கஷ்டம் வந்த காலத்து அப்பெண்மணிகளைக் காப்பாற்றாது கைவிட்டுத் தப்பி ஓடியும், பரதாரகமனிகளாய்ப் பஞ்சமகா பாதகர்களாய் உதித்தும் தமிழ் நாட்டைப் பஞ்சப் படுத்தி அதற்குக் கேடு சூழ்கின்றனர் என்பது யாவரும் நன்கு அறிந்த உண்மையேயாகும். இத்தகைய சிறுமைகளுக்கு உறைவிடமாகிய இத்தமிழ் நாட்டின் நிலைமையைக் கண்டு மனம் நைந்து சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று துணிந்து நமது "குடி அரசு" தனது சுயமரியாதை முரசை முழக்கினால் சிங்கத் தொனியைக் கேட்ட நடைமலைகளாகிய யானைகள் துண்ணென வெருண்டு பிளிறுவது போல, பண்டிதர்களும், போதகர்களும், பிரசாரகர்களும், வித்துவான்களுமாகிய ஆஷாடபூதிகள் எவ்வித சமாதானமும் சொல்ல முடியாமல் பொறாமை மேலீட்டினால் வாயில் வந்தபடி உளறிக்குழறித் துடிக்கின்றனர்! இவர்கள் போலித்தன்மைக்கும் பரிதாப நிலைக்கும் இரங்குவதேயன்றி வேறு யென் செய்வது? பலர் அறியாமையால் மதத்துக்கு, அதாவது குருட்டு நம்பிக்கைக்கும் வயிற்று வளர்ப்புக்கும் பழுது வந்து விட்டதே என்று சுயமரியாதைக் காரரை "நாத்திகர், நாத்திகர்" என்று திட்டிக்கொட்டுகின்றனர். இவ்வாறு ஆராயாது அபிமானம் பற்றிப்பிதற்றுவது அழகும் முறையும் ஆகுமா?

சைவ சமயிகளுள் இரண்டு வகையான கொள்கையாளர் இருக்கின்றனர். அவருள் மிகச் சிறு பகுதியினராகிய ஒரு சாரார் "உலகு கண்டு போற்றும்படி சரீரத்தோடு மறைந்து முத்தியடைய வேண்டும்"—"கூட்டோடு கைலாசம்போகவேண்டும்"—என்று கூறுகின்றனர். இது தான் உண்மை முத்தி என்றும் தீப்பற்றிய கற்பூரம் போலச் சரீரம அருளொளியால் கரைந்து போகவேண்டும் என்றும் கூறுகின்றனர். இக்கொள்கையாளர் மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், பத்திரகிரியார், சேந்தன், முத்துத்தாண்டவர், ஆழ்வாருட்பலர் ஆகியஇவர்களைத் தமது கொள்கைக்கு உதாரணமாகக்காட்டுகின்றனர். திருவாசகம், தேவாரம், திருமந்திரம், குறள், ஔவை குறள் முதலியவைகளையும் சிவாத்துவித நூலென வழங்கப்படும் சுத்த சாதகத்தையும் பிரமாணமாகவும் காட்டுகின்றனர். மேலே கூறிய மாணிக்க வாசகர் முதலியோர் உலகத்தவர் பலர் காணும்படியே தூலத்தோடு மறைந்தார்களாம். இவர்கள் சரீரம் எம்போலியர் சரீரம் போலபூமிக்குள் புதைக்கப்படும்படியும் நெருப்பால் எரித்து விடும்படியும் பிணமாக விழவில்லையாம். ஆனால் இவ்வாறு "கூட்டோடுதான் கைலாசம் போகவேண்டும்" என்ற கொள்கையை தற்காலம் உலகில் வழங்கும் மதங்கள் ஒன்றும் கூறவில்லை. இந்து மத வேதம் ஆகமம் சாத்திரம் முதலியன எவையும் ஒரு சிறிதும் செப்பவில்லை. சமய போதகர்களும் இது தான் உண்மை முத்தி என்று பிரசங்கம் பண்ணுவதும் சீடருக்கு உபதேசிப்பதும் ஒரு போதும் இல்லை. தற்காலம் இவ்வாறு முத்தி அடைந்தவருமில்லை. முத்தியடைந்தவரை நேரே பார்த்தவரும் இல்லை. நேரே பார்த்தவரிடம் கேட்டு அறிந்தவரும் இல்லை. ஆதலால் இக்கொள்கையை எவரும் ஒப்புக்கொள்வதென்பது முடியாத காரியமே! பூத பௌதிக ஆராய்ச்சியில் இடையீடின்றி உழைத்துவரும் நமது மேனாட்டுப் பண்டிதர்களாலும் தங்களது ஆராய்ச்சி மூலம் இக்கொள்கை சரியானதாய் இருக்க முடியும் என்று கண்டு பிடித்துக்காட்டினாலொழிய நாம் இதனை ஒப்புக்கொள்ள முடியாது) இது ஒரு ஜாலவித்தையே என்று தான் கூறுவோம்.

மற்றொரு வகைச் சைவர்—இவர் தாம் மிகப் பெரிய பகுதியினர். சந்தான சைவ ஆசாரியரைச் சேர்ந்தவர். இவர் கொள்கை தான் தற்காலம் தமிழ் நாட்டில் நன்றாகப் பரவியிருக்கிறது. இவர் கொள்கைகளை விரித்துக்கூறுவது மிகையாகும். இவர்கள் இக்கட்டுரையின் தொடக்கத்திற் கூறிய குணங்கள் நிரம்பிய பாண்டங்கள். இவர்கள் வேடம், பூசை, கைச்சாடை, கண்சாடை, கோயில்களில் பெண்களைக் கடைக்கண்ணாற் பார்த்துக்கொண்டு இனிமையாகப் பாடுதல், ஆண் சீடர் பெண் சீடர்களுக்கு யாதோ தீக்ஷைபண்ணுதல், போதித்தல், முத்திரை (குறி) காட்டி யோகம் பழக்குதல், சின் முத்திரைக் கையராய்ச் "சிவோஹம்" என்று சொல்லி செம்மாந்து லஜ்ஜையன்றி வீற்றிருத்தல், சபையார் குறிப்பறிந்து சமயோசிதமாய் பிரசங்கஞ் செய்தல், தடித்த தூலங்களைச் சுமந்து கொண்டு நடக்கமுடியாமல், ஏழைகள் வருந்திச் சுமக்கும் பல்லக்குகளில் வரிசைகளோடு பேட்டி போதல் முதலிய எத்தனையோ பல --எழுத முடியாத-- வஞ்சகச் செயல்களால் சுகபோகிகளாய் வாழ்ந்து செத்துப் போக வேண்டியதென்றும், இவ்வாறு செத்துப் போவது "மரணம்" அல்ல "முத்தி" தான் என்றும் "காயம் கழிந்தக்கால் எங்குமாய்க் கருதான் போல் நிற்பன்" (மெய்கண்டப் பிள்ளை முதல் மாணவர் அருணந்தி சிவாசாரியார் செய்த சிவஞான சித்தியார்) என்ற சந்தான குரவச் சைவ நூற் பிரமாணமுங் காட்டிச் சொல்லுவார்கள். ஆனாலும், மேற்சொன்ன நடை, கொடி "சிவோஹம்" பாவனை முதலியவைகளால் இவர்களுக்கு இரகசியமாக முத்தி கிடைத்து விடுகிறபடியால், இவர்கள் செத்துப்போன பின்பு "செத்துப்போய் விட்டார்கள்" என்ற வார்த்தையை வழங்காமல் "அது அடைந்து விட்டது" என்று சொல்ல வேண்டுமாம். இவர்கள் சாத்திரங்களாகிய "சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலியன இவர்கள் கொள்கைக்கு முக்கிய சாதனமாக இருக்கின்றன.

மேலே கூறிய இரண்டு வகையான கொள்கைகளும் ஒன்றுக்கு மற்றொன்று முற்றும் முரண்படுவதால் கலகங்கள் ஏற்படும் என்று அஞ்சியும், சந்தான குரவச் சைவத்தை இன்னும் தலைமுறை தலைமுறையாகக் காத்துக்கொள்ளுதற் பொருட்டும் தன வைசிய நாட்டிற் சிறந்த தேவகோட்டையில் உள்ள சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கமாகிய உயர்தர நீதி மன்றம் (High Court) இவ்வழக்கை ஒருவாறு சமாதானம் (Compromise) பண்ணித் தனது அரிய பெரிய தீர்ப்பைக் கூறிவிட்டது. அத்தீர்ப்பைக் கூறிய நீதிபதி ஓர் போதகரும் தமிழ்ப் பண்டிதரும் சைவ வேளாளத் திருவாளருமாவார்.

### அத்தீர்ப்பின் சாரம்.

"உலகுகண்டு போற்றத் தூலத்தோடு மறைதல் என்பது எங்கள் சைவ சித்தாந்தத்துக்குவேறான சிவாத்துவித (வீரசைவ) சித்தாந்தமாயினும், அக்கொள்கை உண்மையானதுதான்; சைவர்கள் அனைவராலும் அது கொள்ளத்தக்கதே!

ஆனால் மெய்கண்டப்பிள்ளை முதலிய சந்தான குரவர்கள், பின்னவராகிய நமசிவாயதேசிகரையும் பிறரையும் போலவே, பிராரத்த ஒழிவை உணர்ந்தாவது தங்கள் மரண காலத்தை முன்னாகவே அறிந்து விட்டார்கள். அவர்கள் சரீரம் நிட்டை கூடியது போலவே பீடத்தின் கீழே பூமிக்குள் வைத்து மண்ணாலும் சுண்ணாம்பாலும் மூடிக்கட்டப்பட்டு விட்டது. காலத்தோடு அவர் சரீரங்களும் சமயாசாரியர் முதலியோர் சரீரங்கள் போல உலகு கண்டு போற்ற மறைந்ததென்று ஏன் கொள்ளக்கூடாது? நிலத்துட் புதைக்கப்பட்ட சரீரமும் உலகு கண்டு போற்ற ஞான வெளியாய் மாறிய சரீரத்துக்குச் சரியானது தான். சமயகுரவர் அடைந்த முத்தியையே சந்தான குரவரும் அடைந்து விட்டனர். ஆதலால் மேலே கூறிய கொள்கைகள் இரண்டும் ஒன்று தான்" என்று இவ்வாறு வெகு நயமாகத் தீர்ப்புக்கூறிச் சமாதானம் பண்ணி விட்டார் சைவப்போதகர். இத்தீர்ப்பை "சித்தாந்தம்" என்னும் பத்திரிகையும் வெகு நயமாகப் பாராட்டி நீதிபதியையும்புகழ்ந்து விட்டது.

வாசகர்களே! இம்மாதிரியான மூவகைச்சைவர்களையும் அவர்கள் கொள்கைகளையும் நன்றாகச் சீர்தூக்கிப்பாருங்கள்! இதனால் மதம், சமயம், வேதம், ஆகமம், புராணம், வேதாந்தம், சித்தாந்தம் என்பன வெறும் பேச்சேயென்பதும், போலித்தனமாக சுயநலந்தேடும் உபாயங்களே என்பதும் நன்கு புலப்படுகின்றன அல்லவா? சைவ சமயத்தை தாபித்து விட்ட மெய்கண்டப்பிள்ளை (முற்றுமுணர்ந்த பிள்ளை)யும் அவர் மாணவரும் செய்த போலி சுயநல நூல்களும் பாதிமதியுடைய சாப்பாட்டுச் சாமிகளுக்குத் தான் உரியவை என்பதனை உறுதியாக நம்புங்கள்! நம்புங்கள்!


சத்தியமாக "சுயமரியாதை" ஆக்கமுறத் தொடங்கும் கலி 5030 ம் ஆண்டாகிய இக்காலந் தொட்டு இனி இந்தப் போலி முட்டைச் சைவ ஆஷாடபூதிகள் தந்திரம் பலியாது! பலியாது! மேலே கூறிய நீதி மன்றத்தீர்ப்பைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்? இதனினும் சிறந்த தந்திரப் புரட்டு வேறு உண்டா? இத்தகையான தீர்ப்புக் கூறும் நீதிபதிகளையுடைய நாட்டை எந்த வைத்திய சாலைக்கு அனுப்ப வேண்டியதென்று வாசகர்களே யோசித்துத் தீர்ப்புக் கூறி விட வேண்டியது!

இப்படியான மூன்று வகைப் பைத்தியக்காரச் சைவம் இத்தமிழ் நாட்டில் இருந்து கொண்டு தமிழ்நாட்டை முன்னேற்றமடைய விடாமல் பஞ்சப்படுத்தி விடுவதைப் பாருங்கள்! ஆதலால் சைவ சமயமென்றால் என்னவோ இருக்கிறதாக எண்ணி விடாதீர்கள்! தற்காலம் வழங்கும் மதங்கள் எல்லாம் ஒரு சிலரின் வயிறு வளர்ப்பதற்கே ஏற்பட்டவையென்று சத்தியமாக நம்புங்கள்! சமயம் மதம்

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

## நிருபக்காரர்களுக்கு வேண்டுகோள்.

நிருபங்கள் அனாவசியமான விஷயங்களுடன் அபரிமிதமாய் வருவதாலும் முக்கியமான வியாசங்களுக்கு இடம் வேண்டியிருப்பதாலும் வர்த்தமானங்கள் கண்டிப்பாய் பிரசுரிக்கப்படமாட்டா.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
இனைத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ௵ மார்கழி௴ 2௳.

# சைமன் கமிஷனும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும்.

நமது நாட்டில் தற்சமயம் உண்மையானதும் சுயநலமற்றதுமான பொதுநல சேவை செய்கின்றவர்கள் முக்கியமாய் கவனிக்க வேண்டியது, நமது நாட்டு மக்களுக்குள் கற்பிக்கப்பட்டிருக்கும் பிறப்பு-உயர்வு-தாழ்வை ஒழித்து சமத்துவத்தை ஏற்படுத்தி அவர்களை சுயமரியாதையுடன் வாழச்செய்ய வேண்டியதேயாகும். இதை நாம் பலதடவைகளில் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம்.

எனினும் மக்களுக்குள் சமத்துவமும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்பட்டுவிட்டால் வாழமுடியாத நிலையில் நமது நாட்டில் சில சமூகமும் சில தனிப்பட்ட மக்களும் இருப்பதால், அவர்கள் தங்கள் தங்கள் வாழ்க்கையை இவ்வித்தியாசத்தின் மீதே நிலை நிறுத்திக் கொண்டதால், அவர்கள் மற்றவர்களின் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் விரோதமாக இருந்தே தங்கள் வாழ்நாட்களைக் கழிக்க வேண்டியதான நிலைமை அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டு இருப்பதை நாம் மறைத்துப் பேசுவதில் பயனில்லை.

எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட ஒரு கூட்டம் இருந்தேவந்து தங்கள் சுயநலத்தின்பொருட்டு மக்களின் நலத்தை பாழ்படுத்தி வந்திருப்பது சரித்திர வாயிலாக உண்மையேயாகும்.

எனினும் சமத்துவமும் சுயமரியாதையும் பெற்று முன்னேற்றமடைந்துவரும் நாடுகளின் சரித்திரங்களைப் பார்ப்போமானால், முதலில் இக்கூட்டத்துடன் போர்புரிந்து அவர்களை அழித்தபிறகுதான் நாட்டினுடைய மக்களுக்கு சமத்துவம் கொடுத்து சுயமரியாதையைக் காப்பாற்றி தங்கள் தங்கள் நாட்டை முன்னுக்கு கொண்டுவந்திருப்பதாக அறியக்கிடக்கும். ஆதலால் நம் நாட்டிலும் பொதுநலத் தொண்டில் ஈடுபடுபவர்கள் இக்கூட்டத்தின் தொல்லைக்கு தலைகொடுத்துத்தான் ஆகவேண்டியவர்களாயிருக்கின்றார்கள் என்பதில் ஆக்ஷேபணை இல்லை.

அநேகமாக மற்றநாட்டின் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் தடைவேலைக்காரர்களாயிருந்து தீரவேண்டியவர்கள் பெரிதும் மதத்தின்பேரிலேயே தங்கள் தடைவேலைகளை செய்துவந்ததாக காணலாம். ஆனால் நமது நாட்டின் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் எதிர்த்து நிற்பவர்கள் பெரிதும் அரசியலின் பேரால் தடைகல்லாய் நிற்கின்றார்கள். மதக்காரர்கள் என்பவர்களைவிட அரசியல்காரர்கள் என்பவர்களே தொல்லை கொடுக்கின்றார்கள் என்பதற்கு உதாரணம் என்னவென்றால், நமது நாடு இப்போது மதத்திற்குகட்டுப்பட்டிருப்பதைவிட அரசாங்க சட்டத்திற்கே அதிகமாய் கட்டுப்பட்டிருப்பதேயாகும்.

எனவே எந்த சமத்துவமும் சுயமரியாதையும் இப்போது பெரிதும் அரசாங்க சட்டத்தைக்கொண்டே செய்யப்படவேண்டியநிலையில்இருக்கின்றது. அதனால் நாம் அரசாங்க சட்ட முறையில் சமத்துவம் கேட்கும்போது எதிரிகள் அரசியலின் மூலமாகத்தான் எதிர்த்தாகவேண்டும். எனவே அதை அரசியலின் பேரால் வாழ்பவர்கள்தான் எதிர்த்தாகவேண்டும்.-அன்றியும் மதக்காரர்களின் எதிர்ப்புக்கு நமது நாட்டில் மதிப்பும் குறைந்துவிட்டதால் அரசியலின் பேரால் தடைவேலை செய்பவர்களுக்கு மதக்காரர்களின் பின்பலமும் தாராளமாய் இருக்கும் என்பதில் சந்தேகமிருக்காது.

நிற்க நம்முடைய நாட்டிலுள்ள உயர்வு தாழ்வு முதலிய வித்தியாசங்களைப் போக்க நம்மவர்கள்எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அதற்காகப் பட்டகஷ்டங்களும் இந்நாட்டில் உள்ளயாவரும் அறிந்ததேயாகும். அவர்கள் வேறு எந்த விதத்திலும் முயற்சி செய்து முடியாததனாலேயேதான் நம் நாட்டுமுதிர்ந்த அனுபவசாலிகளும் சுயநலமற்ற பெரியார்களுமாகிய பலர் சேர்ந்து சமத்துவத்தையும் சமசந்தர்ப்பத்தையுமே முக்கியகொள்கைகளாய்க்கருதி, அதற்காக நமதுநாட்டு அரசியல் தொகுதிகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறுவதே முக்கிய நோக்கமாகக் கொண்டு, பார்ப்பனரல்லாதார் என்கின்ற பெயருடன் ஒருஸ்தாபனம் கண்டு, அதற்காகவே பலர் தங்கள் தங்கள் உயிரையும் கொடுத்து வேலை செய்து வந்தார்கள் என்பதும் பலர் உயிரைக்கொடுக்க இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடைமலை.

அதுபோலவே அவ்வியக்கத்தை, நாம் மேலே சொன்னதுபோல் உயர்வு தாழ்வு வித்தியாசத்தாலேயே தங்கள வாழ்க்கையும் பிழைப்பையும் நிலை நிறுத்திக்கொண்ட சமூகமும் அவர்களுக்கு அனுகூலமாயிருந்து வாழவேண்டியவர்களான சில தனி நபர்களும் சேர்ந்து அக்கொள்கைகளை ஒப்புக்கொண்டது போல வேஷம் போட்டு பல சூழ்ச்சிகள் செய்து எதிர்த்ததும் இப்போது நேராகவே வெளிவந்து வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அரசியலின் பேராலும் எதிர்ப்பதும் வெள்ளிடைமலை. இவ்வளவு எதிர்ப்புகளையும் தாண்டி அவ்வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது ஒருவாறு வெற்றிபெற்று இந்தியா முழுவதிலும் அமுலில் இருப்பதும் வெள்ளிடைமலை.

அதனால் அவ்வுரிமை பெற்ற சமூகங்கள் ஒவ்வொன்றும் ஒருவாறு சமத்துவமும் சமசந்தர்ப்பமும் சுயமரியாதை உணர்ச்சியும் பெற்றிருப்பதும்வெள்ளிடைமலையேயாகும். ஆனாலும் இப்போது அதை மேலும் கேட்பதை மறுப்பதற்கும் உள்ளதையும் ஒழிப்பதற்கும் மேல்கண்ட கூட்டமே அரசியலின் பேரால் அதாவதுசுவகட்சி மகாநாட்டின் பேராலும் தேசத்தின்பேராலும் செய்யும் சூழ்ச்சியும் வெள்ளிடைமலையேயாகும்.

நிற்க தற்காலம் இந்தியாவுக்கு அளிக்கப்படப்போகும் அரசியல்சுதந்தரம்எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும்என்பதைவிசாரித்தறிவதற்கென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டாரால் நியமித்தனுப்பிய சைமன் கமிஷனை பஹிஷ்கரிப்பது என்கின்ற ஒரு சூழ்ச்சியையும் குறிப்பாக இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை ஒழிக்கவேண்டும் என்றஎண்ணம் கொண்டே ஆரம்பித்து மக்களை ஏமாற்றுவதும், தாங்கள் மாத்திரம் தங்களுடைய இஷ்டப்படி வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை ஒழிந்த ஒரு அரசியல் சுதந்திர திட்டத்தை ஏற்பாடு செய்து கொண்டு அதை பொது ஜனங்களின் பேரால் சைமன் கமிஷனுக்கு தெரியப்படுத்தவதுமான வேலையில் ஈடுபட்டிருப்பதும் வெள்ளிடைமலையேயாகும். இந்த நிலையில் இந்திய மக்களின் பொது அபிப்பிராயம் என்ன என்பதை அக்கமிஷனுக்கு வெளிப்படுத்த பொதுஜனங்களும் குறிப்பாக மகமதியர்களும் கிறிஸ்தவர்களும் பார்ப்பனரல்லாதார்களும், தாழ்த்தப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் தீண்டப்படாதவர்கள் என்று விலக்கப்பட்ட மக்களும் மிகுதியும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

எனவே மேற்படி கமிஷன் சென்னைக்கு வரும்போது இக்கூட்டத்தவர்கள் அவர்களுக்கு மனமார்ந்ததும் ஆடம்பரமும் பெருமையும் கொண்டதுமான வரவேற்பு அளித்து அவர்களை தங்கள் நண்பர்களாக்கிக்கொள்ள வேண்டியதுடன் தங்கள் தங்கள் குறைகளை தாராளமாய் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டியவர்களாகிறார்கள் என்பதை நாம் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்பவர்களில் யாரும் இதுவரை அதுகூடாது என்பதற்கு சரியான காரணமோ அல்லது எல்லாமக்களுக்கும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படியான வேறு மார்க்கமோ எடுத்துச்சொன்னவர்களும் இல்லை.

பலகூலிகள் மாத்திரம், மக்கள் வகுப்புவாரி பிரதி நிதித்துவம் கேட்பதைப்பற்றி

"தென்னாட்டில் ஒருபகுதியில் பார்ப்பனரல்லாதார் என்கின்றபேரால் யாரோசிலர் மாத்திரம்தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கின்றார்கள், அதுவும் சர்க்கார் தாசர்கள் கேட்கிறார்கள், பொதுஜனங்கள் கேட்கவில்லை" என்கின்ற ஒருமந்திரத்தையே சொல்லிக்கொண்டு இதை பொதுஜனங்கள் நம்பும்படி பிரசாரம் செய்து இதனாலேயே சைமன் கமிஷன் கண்ணிலும் பொதுஜனங்கள் கண்ணிலும் மண்ணைப்போட்டு தெரியாமல் செய்துவிடலாம் என்பதாக மனப்பால் குடித்துக்கொண்டு நமது நாட்டில் ஒருவாறுவயிற்றுப் பிழைப்பு பிரசாரம் செய்துவருகின்றார்கள். ஆனால் இவர்களுக்கு தக்க பதில் கீழ்கண்ட வார்த்தைகள் தான். அதாவது,

எட்டுக்கோடி ஜனங்கொண்ட மகமதியர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கின்றார்களா இல்லையா? என்பதும்,

ஐந்து கோடி சனசமூகங்கொண்ட தீண்டாதவர்கள் என்பவர்கள் எல்லோரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கின்றார்களா இல்லையா? என்பதும்,

பார்ப்பனரல்லாதார் இயக்கம் வகுப்புவாரி இயக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை அடிப்படையாகக் கொண்டதா இல்லையா என்பதும்,

கிறிஸ்தவர்களும் ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கின்றார்களா இல்லையா என்பதுமேயாகும்.

குறிப்பாக மகமதியரில் மௌலானாக்கள் ஷவ்கத்அலி மகமதலிபோன்ற வீரர்கள் சர்க்கார் தாசர்களா என்பதும் தீண்டாதவர்கள் என்று ஒதுக்கித்தள்ளப்பட்ட சுமார் 5 1/2 கோடிமக்கள் சர்க்கார் தாசர்களா என்பதும் பார்ப்பனரல்லாதார்களில் பெரும்பாலோர் அதாவது திருவாளர்கள் எஸ்.ராமநாதன் எம். ஏ. பி. எல், ஆரியா எம். ஏ., தண்டபாணி பிள்ளை, ஈ. வெ. ராமசாமி நாயக்கர், சிதம்பரம்பிள்ளை முதலியவர்களைப்போன்ற கோடிக்கணக்கானவர்கள், அதாவது 1 வருஷம் 2 வருஷம் 10 வருஷம் ஒருதடவை இரண்டுதடவை மூன்றுதடவை நான்கு தடவை ஐந்து தடவை தேசத்திற்காக ஜெயிலுக்குப் போனவர்களும், பல வருஷம் இந்த மாகாண காங்கிரஸ் தலைவர்களாகவும் காரியதரிசிகளாகவும் மகாணகாங்கிரஸ் ஜில்லா காங்கிரஸ் தாலூகா காங்கிரஸ் மகாநாடுகளின் தலைவர்களாகவும் இருந்தவர்களும், ஒரு கோடி இரண்டுகோடி ஐந்துகோடி பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள பெரிய ஜமீன்தார்களும, 1 லக்ஷம், 2 லக்ஷம் கிஸ்து கொடுக்கக்கூடிய மிராசுதார்களும், ஐம்பதினாயிரம் அறுபதாயிரம் ரூபாய் வருமான வரிகொடுக்கும் வியாபாரிகளும், பெரியதலைவர்கள் என்று மதிக்கத்தக்கவர்களும், சாதாரண குடியானவர்களுமாகிய மக்கள் கூடிச்செய்யும் தீர்மானமும் மற்றும் அநேக சமூக மகாநாடுகள் செய்யும் தீர்மானமும் சர்க்கார் தாசர்களாலா? என்பதும்,

இதற்கு எதிரிடையாய் இதன் மூலம் தவிர வேறுமூலத்தில ஜீவனத்திற்கு மார்க்கமே இல்லை என்று சொல்லக்கூடியவர்களும் சமயம் போல் பேசுகின்றவர்களும் காசு கொடுத்தபக்கம் பேசுகின்றவர்களும் தங்கள் சுயநலத்திற்காக என்ன வேண்டுமென்றாலும் செய்யக்கூடியவர்களும் இதுவரை ஆயிரக்கணக்கான குட்டிக்கரணம் போட்டவர்களும் அவர்களாலேயே மேல்பட நிலையை மறக்கமுடியாதவர்களும் பொது ஜனங்களாகி விடுவார்களா. என்பதும் தான்.

வார்த்தைகளைப்பேச கிளிப்பிள்ளைக்கும் மைனா குருவிக்கும் கூடத்தெரியலாம். அது இன்னவார்த்தை என்று உணர்ந்து தன் புத்தியைக்கொண்டு தனக்காக பேசுகின்றதா என்பதுதான் கவனிக்கத்தக்க விஷயமாகும். ஆதலால் பொதுஜனங்கள் தங்கள் அறிவை இவ்விஷயத்தில் நிதானமாக உபயோகித்து சைமன் கமிஷனிடம் நடந்துகொள்ளவேண்டியதைப்பற்றி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதையும் சமீபத்தில் செங்கல்பட்டில் கூடப்போகும் மகாநாட்டில் எல்லோரும் கலந்து உண்மையான முடிவைச்செய்து அதை சைமன் கமிட்டிக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பகிஷ்காரக் கூட்டத்திற்கு சென்னைதான் முதல் முதல் புத்திகற்பித்த இடமாதலால் அதைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை என்றே கருதுகிறோம்.

## கிருஷ்ணசாமி பிள்ளை மறைந்தார்!

நமது இயக்கத்திற்கு ஆரம்ப முதல் ஆதரவளித்து வந்தவரும் இயக்கத்திற்கு பணம் காசு தாராளமாய் செலவுசெய்துவந்தவரும் கோயமுத்தூர் மகாநாட்டுக்கு காரிய தரிசியாய் இருந்தவரும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்திற்கு காரிய தரிசியும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கும் இயக்கத்திற்கும் உண்மையான உள்ளன்போடு கூடிய உதவியாளருமான நமது உண்மை நண்பர் திரு. கோவை, நெய் மண்டி கிருஷ்ணசாமிபிள்ளை அவர்கள் காலஞ் சென்றது மிகவும் துக்கப்படத்தக்க சம்பவமாகும். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் அம்மாதிரியான உள்ளன்போடு உழைக்கும் மற்றொரு நண்பரை கோவையில் காணுவது மிகக்கடுமை யென்றே சொல்லவேண்டும். அவர்களின் அருமை மனைவியாருக்கும் தாயாருக்கும் தம்பிமார்களான நமது நண்பர்கள் திருவாளர்கள் சுப்பு, பஞ்சலிங்கம் ஆகியவர்களுக்கும் நமது மனமார்ந்த அநுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

## கனம். முத்தையா முதலியாருக்கு வரவேற்பு.

துறையூர் சுயமரியாதைச் சங்கத்தார், மந்திரிகளில் ஒருவரான கனம் முத்தையா முதலியார் துறையூருக்கு 18—12—28ல் விஜயம் செய்யும் பொழுது அவருக்கு ஒரு சிறந்த வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என ஒரு நிருபர் தந்தி மூலம் தெரிவிக்கிறார்.

## மதிப்புரைகள்.

புதிய வட்டிக்கணக்குப் புத்தகம்:—இஃது, மாயவரம் காந்தி பாடசாலை மானேஜர் திருவாளர் சு. கதி. கதிரேசன் செட்டியாரவர்களால் கணித்து வெளியிடப்பட்டதாகும். இதில் தினசம்பளம், மாதச்சம்பளம், தினவட்டி, மாத வட்டி, வருஷ வட்டி, முதலியவைகளும், ரூபாய், சதம், ரிங்கி அல்லது டாலர் முதலியவைகளுக்கு அணா, பைசா, தூளி முதலியவைகளுட கணிக்க வழிகளும், கணித்த விடைகளும பத்திபத்தியாக நிறைந்து விளங்குகின்றன. இவைகளிலிருந்து எவ்வளவு சிறிய தொகையாயிருந்தாலும், எவ்வளவு பெரிய தொகையாயிருந்தாலும் — நாள். மாதம் வருஷம் எத்தனைக்கானாலும் வட்டியோ, சம்பளமோ, க்ஷணத்தில் கண்டு பிடித்து விடலாம் அல்லது கணித்து விடலாம். இஃது பண லேவாதேவி செய்பவர்களுக்கும், தமிழ் ஆங்கில ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது. இப்புத்தகம் ராயல் 1/8 அளவில், 300 பக்கங்கள் கொண்டதாய், நல்ல தாள்களில் சுத்தமான அச்சில் பதிப்பிக்கப்பட்டதாய் காலிகோ பைண்டுடன் விளங்குகிறது. புத்தகம் 1-க்கு விலை ரூ. 5. வேண்டுவோர் புத்தகாசிரியருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

சுயராஜ்ய அமைப்பு அல்லது நேரு அறிக்கை:— இஃது பண்டிதர் மோதிலால் நேரு அவர்கள் இயற்றியதின் மொழி பெயர்ப்பு. இதில், இந்தியாவுக்கு எத்தகைய அரசாங்க அமைப்பு வேண்டுமென்பது விளக்கப்பட்டிருக்கிறது. கிரௌன் 1/8 அளவில் 250 பக்கங்கள் கொண்டது. விலை புத்தகம் 1-க்கு ரூ. 0—12—0 வேண்டுவோர், சென்னை, சௌகார் பேட்டை, ருடன் கம்பெனியாருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

அன்னபூர்ணாலயம்:—இந்நாவல் திருவாங்கூர் அரசாங்க ப்ரதம மொழி பெயர்ப்பாளர் திருவாளர் T. ராமலிங்கம் பிள்ளை M. A. அவர்களால் இயற்றப்பெற்றது. இது பங்காளி பாஷையில் திருமதி நிருபமாதேவி இயற்றிய 'அன்னபூர்ணா மந்திரம்' என்ற நாவலின் மலையாள மொழி பெயர்ப்பைத் தழுவிய தென்று தெரிகிறது. இந்நூலுக்கு தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரும் புலவருமான திருவாளர் T V. உமாமகேசுவரம் பிள்ளை B. A. B. L. அவர்கள் முகவுரை அளித்துள்ளார்கள். புத்தகத்திற் காணப்படும் கதை [illegible] போக்கும் தமிழ் நடைப்போக்கும் படிக்கப்படிக்க இனிமையாய் இருக்கிறது. இப்புத்தகம் கிரௌன் 1/8 அளவில் 200 பக்கங்கள் கொண்டது. விலை புத்தகம் 1-க்கு ரூ. 1. ஆசிரியரிடம் கிடைக்கும்.

அற்புத விகடன் அல்லது வஞ்சக நாதனும் லெஞ்சப்பிரியனும்:— இது திருவண்ணாவநல்லூர் திருவாளர் S M. வேலாயுதம் பிள்ளையவர்களால் எழுதப்பட்ட ஒரு சிறு வேடிக்கையான நாவல் பார்ப்பனீயத்தின் சூழ்ச்சிகளையும் கொடுமைகளையும் வெகு அழகாக [illegible] ஆசிரியர் [illegible] ருக்கிறார். விலை அணா [illegible] கோவில் பட்டி M. A. சிதம்பரம் பிள்ளையவர்களிடம் கிடைக்கும்.

## கந்த சஷ்டியும் நாடார்களும்

தீண்டாமைப்பேய் தலைவிரித்தாடும்தென் திருவிதாங்கூரில் மைலாடி என்று ஒரு ஸ்தலம் உண்டு. இவ்வூர் ஜாதிக்கர்வம்கொண்ட "மேல் வகுப்பாரை"விட பன்மடங்கு நாடார் வகுப்பாரைச்சார்ந்த உண்மை இந்துக்கள் நிறைந்த இடம். இவ்வூரில் ஒரு தெருவில் சில நாடார் வீடுகளும் உள. இத்தெருவில் வசிக்கும் நாடார் சகோதரர்களுக்கு ஊர்வலமோ உற்சவமோ கொண்டாடுவதற்கு இத்திருவிதாங்கூர் கவர்ன்மெண்டாரின் சகாயத்தாலும் பலாத்காரத்தாலும் "மேல் ஜாதியார்" தடைசெய்து வருகிறார்கள். அன்றியும் அடுத்துள்ள மருங்கூரிலிருக்கும் சுப்பிரமண்யசுவாமி கோவிலில் நடக்கும் ஐப்பசி உத்ஸவத்தின் ஆறும்நாளாகிய வீரனும் சூரனை சம்காரம் செய்யும் நாளன்று அதாவது கந்தர் சஷ்டியன்று சுற்றியுள்ள பாமரமக்களும் பார்ப்பன சூழ்ச்சியை அறியாத சாது ஜனங்கள் பலரும் விபூதி உத்திராக்ஷம் முதலியன அணிந்து திராவிட மகனாகிய பத்மாசூரனை ஆரியமகனான சுப்பிரமண்யன் வதைசெய்ய பக்கத் துணையாயிருப்பதாய் வேறு சிலரும் மோக்ஷம் பெறுவதற்கு சுப்ரமண்யக் கடவுளை பக்தியாய் வேண்டுவதாக சிலரும் தனதடக்கமுடியாத காமத்தால் தனக்குச்சரியான ஜோடியை தெரிந்தெடுப்பதற்காகச் சிலரும் புத்திரசந்தானத்துக்காகச் சிலரும் கையில் பணமில்லாது களவு செய்வதற்காகச் சிலரும் பெருங் கூட்டமாகக் கூடுவார்கள். இவர்களில் மோக்ஷத்தை விரும்பும் சில வைத்தீஸ்வர மற்றேனையோர் அனைவரின் விருப்பமும் அக்கடவுள் கிருபையால் கைகூடி வருகின்றது. உதாரணமாக இவ்வாண்டிலும் ஷை இடத்தில் ஷை பக்தர் கூட்டத்தில் களவுபோன செயின்களும் காப்புகளும் எண்ணற்றவை. வேறு இங்கு நடக்கும் வெளியிடத்தகாத ஆபாஸ செயல்களுக்கும் அளவே இல்லை. இத்தன்மையுள்ள பக்தர்களுக் கதிபதியாகிய கடவுளை பத்தாம் உத்ஸவத்தன்று அசுவவாகனத்தில் வைத்து அலங்கரித்து மேற்கவரிதக மைலாடியில் கொண்டுபோய் உத்ஸவ நடத்துவதுண்டு. இவ்வுத்ஸவத்தில் உண்மை இந்துக்களும் இந்துமத தெய்வங்களின் நாமதேயத்தை தரித்த அவ்வூர் நாடார் சகோதரர்கள் தரிசிக்கவோ தொடவோ கூடாதென தடுக்கும் நம்பூரிகளை நாம போற்றுகிறுக்க

9ம் பக்கத் தொடர்ச்சி.

என்னும் செறக்களையும் போலித்தனமாக வயிறு வளர்க்கும் வழியென்னும் பொருளோடு காலத்திற கேற்றவாறு "சுயமரியாதை அகராதியில்" சேர்த்துக் கொள்ளுங்கள்! இதோ நாம் முன்னேற்றமடையும் காலம் வந்து விட்டது! ஆதலால் வீண் காலம் போக்காதீர்கள்! சீர்திருத்தத்துக்காக பாடுபடுங்கள்! நாயக்கர் அவர்களுடன் ஒத்துழையுங்கள்! சுயமரியாதையைக்கைகொண்டு ஒழுகுங்கள்! நாயக்கர் அவர்களுக்கு நன்றி செலுத்துங்கள்! ஏழைகளுக்கு இரங்குங்கள்! அடிமைத் தனத்தை ஒழியுங்கள். அன்பைப் பரப்புங்கள். சுயமரியாதைக்கு ஜே! குடிஅரசுக்கு ஜே! சத்தியம் தழைக்க!!!

## திருச்சி ஜில்லா செனேட் சபை அங்கத்தினர் தேர்தல்.

ஜனாப் P. கலீப்டீன் சாயபு பகதூர் M.A. B.L. அவர்களுக்கு 38 வோட்டுகளும் ஸ்ரீமான் கோபால் ராவ் B. A. B. L. அவர்களுக்கு 20 வோட்டுகளும் கிடைத்தன. அதிக வோட்டுகள் பெற்ற ஜனாப் P. கலீப்டீன் சாயபு பகதூர் M. A. B. L. அவர்கள் செனேட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த எலெக்ஷனில் காங்கிரஸ் கட்சி டாக்டர் T. V. S. சாஸ்திரி அவர்கள், ஸ்ரீமான் கோபால் ராவ் அவர்களுக்காக பகிரதப் பிரயத்தனப்பட்டும் காங்கிரஸ் கட்சியார் தோல்வியுற்றது காங்கிரசின் யோக்கியதையையே காட்டுகிறது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## நிலக்கோட்டை ரேஞ்சு எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்கள் முதலாவது கான்பரன்ஸ்.

நிகழும் 22-12-28-ல் இவ்வூர் பஸ்டு கிரேடு இந்து எலிமெண்டரி ஸ்கூலில் நடைபெறும் நிலக்கோட்டை ரேஞ்சு எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்கள் முதலாவது கான்பரன்சுக்கு தலைமை வகிக்க பட்டி வீரன்பட்டி பிரபல கனதனவந்தரும் மிராஸ்தாரும் நாடார் மஹாஜன சங்கக் காரியதரிசியும் சென்னை சட்ட சபை அங்கத்தினரும் இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவருமான கனம் ஸ்ரீமான் W. P. A. சௌந்திர பாண்டிய நாடார் அவர்கள் விஜயம் செய்வாரென்று திரு. எஸ். பி. என். செட்டியார் எழுதுகிறார்.

முடியாது. ஏனென்றால், கள்ளருக்கும் காமிகளுக்கும் துணையிருக்கும் இக்கடவுளை பாமரர்கள் தரிசிப்பதும் வழிபடுவதும் தவறன்றோ. இப்பாமரர்களுக்கு இக்கள்ளக் கடவுளை வழிபட உரிமையில்லாததால் அந்த கடவுளின் சீடர்கள் இப்பாமர நாடார் மக்களை விரட்டுவது நியாயமன்றோ, ஆதலால் அருமை திராவிட சகோதரர்களே! நீங்கள் இனியாவது இக்கள்ளக் கடவுளின் நாமதேயத்தை உங்கள் சந்ததியார்களுக்கு சூட்டாமலும் அக்கடவுளை வழிபடாமலும் அக்கடவுளின் சீடர்களின் காலில் விழாமலும் சமூக கைங்கரியம் செய்து சுயமரியாதையுடன் வாழ்வதே மேலான தர்மமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ராமசாமி நாடார், மைலாடி.

## தேவை!

"ரிவோல்ட்" "குடி அரசு" பத்திரிகைகளுக்கு ஏஜண்டுகள் தேவை.

மாயவரம், கும்பகோணம், திருவாரூர், தஞ்சை, சிதம்பரம், சென்னை கடலூர் ஆகிய இடங்களுக்கு "குடி அரசு" "ரிவோல்ட்" பத்திரிகைகளை விற்பனை செய்யவும் சந்தாதாரர்களுக்கு பட்டுவடா செய்யவும் ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைகளைப் பற்றி எழுதி தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், 'குடி அரசு',
ஈரோடு.

## கனம். பனக்கால் ராஜா உருவப்படத் திறப்பு விழா.

சேலம் செவ்வாய்ப்பேட்டை ஷாப்பு வியாபாரம் திரு. கே. சிவப்பெருமாள் பிள்ளை கேட்டுக்கொண்டபடி மாஜி மந்திரி கனம். பனக்கால்ராஜா அவர்களின் திருவுருவப்படம் சேலம் ஜில்லாபோர்டு ஆபீஸ் "போக்ஸ் ஹாலில்" வைக்கப்பட ஜில்லா போர்டாரால் அனுமதி யளிக்கப்பட்டாய் விட்டது. கூடியசீக்கிரம் சென்னை சட்ட மெம்பர் கனம் கிருஷ்ணன் நாயர் அவர்கள் ஷை திருவுருவப் படத்திறப்புவிழாவை நடத்துவாரென்று எதிர்பார்க்கப் படுகிறதென்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.


## அமெரிக்கன் போதனாமுறை.



இங்கிலீஷ் தெரியாதவர்களுக்கும் மாதம் 30 ரூபாய் முதல் 300 ரூபாய்வரை சம்பாதிக்கும் விபரம் இனமாக அனுப்பப்படும். மானேஜருக்கு எழுதவும்,

லாம்பர்ட் லாபரட்டரி,
திருத்தங்கூர் இ. என். 43,
திருநெல்விக்காவல் போஸ்ட்.

## ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றாடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வாரா து. இந்த லேகியத்தில் கழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை „ 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஜீவ ரக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S. I. R.

## புத்த சமய அழிவு.

'ஜீவகோடி ரஹஸ்யம்' என்ற புஸ்தகத்திலிருந்து அருப்புக்கோட்டை சன்மார்க்க சங்கத்தாரால் எடுத்தனுப்பப்பட்டது.

'சமணர்களையும் புத்தர்களையும் ஒழிக்க ஆரியர்கள் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தும் அக்காலத்தில் முடியாமல் எங்கும் புத்தமதமே நிறைந்திருந்தது. கடைசியில் கூன் பாண்டியன் சமண மதத்திலிருந்தாலும், அவன் மனைவியும் மந்திரியும் ஆரியர் மதத்தினர்களாயிருந்தார்கள். இவர்கள் சீர்காழியில் ஞான சம்பந்தனென்னும் ஒரு ஆரியனுடன் கலந்து சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். ஷை சம்மந்தனும் தனக்கு ஆறாயிரம் பேர் சிஷ்யர்களென்று பெயர் வைத்துக் கொண்டு ஆறாயிரம் யுத்த வீரர்களைத் தயாரித்து மதுரைக்கு வந்து ஒரு கூறைக்கட்டடத்திலிறங்கி யிருந்தார்கள். அன்று இரவில் தாங்களே தங்கள் கட்டடத்தில் தீயை வைத்துவிட்டு புத்தர்கள் பேரில் பழி தூற்றி அவர்களுடன் போர் புரிந்து வென்று, தன் மதத்துக்கு வந்து விபூதி பூசிக்கொண்டவர்கள் போக பாக்கிப்பேரில் சிலரைச் செக்கில் போட்டு ஆட்டியும் சிலரைக் கழுவிலேற்றியும் கொலை செய்து விட்டார்கள்! ஆ! என்ன கொடுமை! என்ன அநீதி! என்ன பரிதாப சிக்ஷை! அரசனை முதுகில் மிதிக்கக் கூன் நிமிர்ந்து விட்டது! மற்ற விடங்களிலுமிப்படியே வெற்றியடைந்து இந்தியாவில் புத்த சமண மதத்தை அடியோடே களைந்து விட்டார்கள். அவஸ்தைப்பட்ட சமணர்கள் சமயம் பார்த்து எதிரிகள் கோவிலுக்குள் சென்றிருக்கும்போது தீயை வைத்துக் கதவைச் சாத்திக் கொளுத்திப் பழி தீர்த்து விட்டார்கள். இதை ஜோதியிற் கலந்து முத்தியடைந்து விட்டதாகவும் சமணர்களை வாதில் வென்றதாகவும் புராணம் எழுதி முடித்து விட்டார்கள்.

பாரதம் ராமாயணம் பொய்க்கதையென்று ஆரியராகிய அகஸ்தியரும் தன் நூலிற் சொல்லியிருக்கிறார். மேற் சொல்லியபடி சைவ சமயக்காரர்களும் வைஷ்ணவ சமயிகளும் ஒருவருக்கொருவர் வீம்பு போட்டு தங்கள் தங்கள் சமயத்தையும் மூர்த்திகளையும் பெருமை பாராட்டிப் புறச் சமயங்களையும் மூர்த்திகளையும் இழிவு கூறி புராணங்களுண்டாகிப் புளுகிக் கட்டிவைக்க ஆரியர்களே உபாத்தியாயர், அவர்கள் தங்களையும் தங்கள் வகை அகஸ்தியர் முதலியவர்களையும் எவ்வளவோ பெருமை பாராட்டியிருப்பதும் நன்கு விளங்கும்.

மனதுக்கும் புத்திக்கும் அறிவிற்கும் அனுபவத்துக்கும் சிறிதுங்கூட பொருத்தமில்லாத பித்தங்கொண்டவன் எண்ணம்போற் பிதற்றிய மேற்சொல்லிய கதை புராணங்களை நம்பிக்கொண்டு அதில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு இன்னுந்தெளிவு வராது மயங்கிக்கிடப்பது அவ்வாரியர்கள் செய்த சூழ்ச்சியின் பயனே.

தற்காலத்தில் சைனு, ஜப்பான், பர்மா முதலிய நாட்டில் அறுபது கோடிக்கு மேற்பட்ட ஜன சங்கையுள்ள ஜீவகாருண்யக்கொள்கையுடைய புத்த சமயத்தை அனுசரித்த ஆதி சைவர்களாகிய தமிழர்களில் சிலர் பூஜைத் தொழிலைக் கைக்கொண்டு பண்டாரக் குருக்களாகிப் பின் பிராமணர்களானார்கள்.

### மதச்சண்டை.

மத்வாச்சாரி, சங்கராச்சாரி, நீலகண்டாச்சாரி முதலியவர்கள் வைணவ வேதாந்த சைவ முதலிய சமயங்களை ஸ்தாபிக்க ஒவ்வொருவரும் அவரவர்கள் காலங்களில் கீழ்க்கடை ஜனங்களை வசப்படுத்தி அநேகரைச் சேர்த்துக்கொண்டு அவர்களை வைணவ வேதாந்த சைவப் பிராமணர்களாக்கி பூணூலையும் நாமத்தையும் போட்டு அடிதடிப் பிரயோகம் பண்ணி அநேகரைத் தங்கள் தங்கள் சமயங்களிற் சேர்த்திருக்கிறார்கள். தற்காலத்திலும் அவர்களைப் பேச்சு வித்தியாசத்திலறிந்து கொள்ளலாம். ஆனால் வேதாந்த சமயத்திலோ சாமி யென்பதும் ஜாதி வித்தியாசமென்பதுமில்லை. அப்படியிருக்க இக்காலத்தில் ஷை கொள்கைக்கு விரோதமாய் வித்தியாசம் பாராட்டி வருகிறார்கள். ஆரியர்களோ சமயம்போலவேலை செய்தவர்கள். புத்தர்களுக்கு மிவர்கட்கும் கொள்கையில் சொற்ப மாறுதல் தான். அதற்காகச் செய்த கொடுமை எவ்வளவு! மகம்மதியர்கள் துருக்கி தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்து அநேகரை மகமதியர்களாக்கி யிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களும் வேலை செய்து அநேகரைக் கிறிஸ்தவராக்கிக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாய் இந்தியாவிலிருக்கும் மகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் நம் இந்தியர்களே. ஆரிய சமாஜத்தார்கள் அநேக ஜனங்களை ஆரியராக்கிச் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். பிர்ம சமாஜத்தாரும் இந்து மகா சங்கத்தாரும் அப்படியே ஒன்று படுத்துகிறார்கள். இந்தியாவில் நடந்த மதச் சண்டைபோல உலக முழுதும் நடந்தேயிருக்கிறது. ஆகிலும் எந்த மதம் கடவுளைக் காண்பித்ததோ! கையைப் பிடித்துக்கொண்டு மோட்சலோகங்கொண்டு சேர்த்தது எந்த மதமோ! ஏனிப்படியெல்லாம் செய்யவேண்டும்? மதப்பயித்தியமென்னும் பேய் பிடித்தல்லவா இப்படியெல்லாம் ஆட்டிவைத்தது! என்ன மதக்கொடுமை! மிகக்கொடுமை!

கொலை விபசாரம் முதலிய அக்கிரமங்கள் நிறைந்த புத்திரகாமேஷ்டி, மதன காமேஷ்டி, அஸ்வமேதி, அஜமேதி, நரமேதி, குக்குடயாகம் முதலிய ஆர்ய ஸ்மிர்தி வழியினர்கள் செய்த வேள்வியின் கதையோ மிக்க ஆபாசமுடையதே.

---

8-ம் பக்கத்தொடர்ச்சி.

கொண்டவர். ஆகையால் தமிழ்பாஷையில் அவருக்கு சிறு பழக்கமே உண்டு.

அப்புத்தகத்தின் கண் 67,68 ஆவது பக்கங்களில் கண்டுள்ள விஷயங்கள் ஷை ஆசிரியர் ராமாயணத்தை ஆராய்ச்சிசெய்து அஃதினின்று கீழ்கண்ட தன்னுடைய அபிப்பிராயத்தை யெழுதி யிருக்கிறார். அதாவது:—

ஆரியர்கள், மதசம்மந்தமான ஆத்திரங்கொண்டு திராவிடர்களை வானரங்களென்றும், வானரப் படைகளென்றும், யாகம் முதலிய சடங்குகளை நடத்துவதற்கு விரோதமாகவும், நடத்தவொட்டாமல் தடுக்க வல்லமை யுள்ளவர்களாகவுமிருந்தவர்களைராக்ஷசர்களென்றும், சொல்லியிருக்கிறார்களென்று எழுதியிருக்கிறார். 87 88, 115, 116, 117, 118, 119, பக்கங்களிலுள்ள விஷயங்கள் மற்றய ஸமஸ்கிருத புஸ்தகங்களிலுள்ள ஸ்லோகங்களின் மொழிபெயர்ப்பு என்று ஷை ஆசிரியர் கூறி ஆங்காங்கு அந்தந்தஸ்லோகங்களைதமிழ் எழுத்தால் எழுதியுமிருக்கிறார். அந்தப் பக்கங்களில் யாதொரு விதமான விளக்கமில்லாத வார்த்தையாவது சமாசாரமாவது கிடையாது.

எந்த வகையிலும், மதசம்மந்தமாகவும், ஜனச்சார சீர்திருத்த சம்மந்தமாகவும் முன்னேற்றமடைய வேண்டுமென்ற தனி நோக்கத்துடனேதான் ஆக்கியோன் கோரிக்கைக்கிணங்க நான் அப்புத்தகம் வெளிவருவதற்கு உதவிசெய்தேன். வேறெவ்விதமான விரோத உணர்ச்சியும் எனக்கில்லை.

---

### நாலாவது யாதவ மகாநாடு.

சென்னை ராஜதானி யாதவர்கள் நாலாவது மகாநாடு திருநெல்வேலியில் 26, 27 டிசம்பர் மாதம் கூடும். வேலூர் ஸ்ரீமான் வி. கிருஷ்ணரெட்டியார் (யாதவர்) பி. எ. பி. எல். வக்கீல் அக்கிராசனம் வகிப்பார். இம்மகா நாட்டுக்கு சகல யாதவ குல அபிமானிகளும் விஜயம் செய்து முன்னேற்றமாறுகேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

எம். கே. ஆராவமுது பிள்ளை.

---

உடுமலைப்பேட்டை

## டி. மு. கோர்ட்டு.

1928ளு I. P. 19
1923ளு C. M. P. 940

மனு வாதி:—பொம்ம நாயக்கன்.

எதிர்மனு வாதிகள்:—

திருமூர்த்திசெட்டி 1, முத்தநாயக்கன் 2, கந்தசாமிக் கவுண்டன் 3, சுந்திரம் செட்டி 4, ருத்திரப்ப நாயக்கன் 5

உடுமலைப்பேட்டை தாலூகா கொண்டம்பட்டி மஜரா சனுப்பட்டி மலைச்சாமி நாயக்கன் மகன் பொம்ம நாயக்கன்—மனுவாதி.

தாராபுரம் தாலூகா நல்லிபாளையம் முத்துக் கவுண்டர் மகன் கந்தசாமிக் கவுண்டன் 3ம் எதிர் மனுவாதி.

பொள்ளாச்சி தாலூகா காரிபாளையம் மஜரா வசவநாயக்கன்பட்டி முத்தஞ்செட்டி மகன் சுந்திரம் செட்டி 4ம் எதிர்மனு வாதி.

ஷை நெம்பரில் மனுவாதி தன்னை இன்சால்வெண்டாககவேணுமென்று மனுகொடுத்து ஷை மனு 20–12–28ல் விசாரணைக்கு போட்டிருக்கிறது. ஷை தேதியில் 3, 4 எதிர்மனு வாதிகள் ஆக்ஷேபணை இருந்தால் தெரிவித்துக்கொள்ளவும். இல்லாவிட்டால் ஒரு கக்ஷி செய்யப்படும்.

A. R. குருமூர்த்தி நாயுடு
வாதி வக்கீல்.

உடுமலைப்பேட்டை, 11—12—28.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

நீ சொல்லுகின்ற குணங்கள் கொண்டே ஒரு வஸ்து இருக்க முடியாதென்று சொல்லுவதுடன் அந்தக் கேள்வியை அர்த்தமற்றதும் (கோபித்துக் கொள்ள வேண்டாம்) முட்டாள் தனமானதுமான கேள்வி என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படிச் சொல்வதற்காக அம்மா! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும்.

தாயார் - மகனே நீ அப்படி கடுமையாக சொல்வதைப்பற்றி எனக்கு மிகவும்சந்தோஷமே தயவு செய்து இன்னம் ஒரு நூறு தடவை சொல்லு பார்ப்போம், என் காது குளிரட்டும்.

மகன்:- என்னம்மா ஒருவர் உன்னை முட்டாள் என்று சொன்னால் அது உனக்கு மகிழ்ச்சியாயிருக்கின்றது என்றால் அது எனக்கு அதிசயமாயிருக்கின்றதே?

தாயார்:- இதில் அதிசயமொன்றுமில்லை, நீ என்னையா சொன்னாய்? அந்தமாதிரி கேள்வி கேட்டவர்களைத் தானே சொன்னாய்? அந்த மாதிரி கேள்வி நானாகேட்டேன்? கேட்டவர்களைத்தானே அந்த முட்டாள்பட்டங்கள் போய்ச் சேரும். நான் எதற்காக வருத்தப்பட வேண்டும்?

மகன்:- (சற்று யோசித்துப்பார்த்து) நீ சொல்லுவது ஒன்றும் எனக்கு புரியவில்லையே. நீதானே அந்தமாதிரி கேள்வி இப்பொழுது என்னை கேட்டாய்?

தாயார்:- மகனே நன்றாய் யோசித்துப் பார், முதலில் நீ அந்தமாதிரி என்னை ஒரு கேள்வி கேட்கவில்லையா?

மகன்:- என்னம்மா, நான்சாமியைப் பற்றி கேட்ட கேள்விக்கும் நீ பெட்டியில் இருக்கும் வஸ்து என்பதைப்பற்றி கேட்கும் கேள்விகளுக்கும் வித்தியாசமில்லையா?

தாய்-என்ன வித்தியாசம் வேண்டுமென்கிறாய்? நீ கேட்ட வஸ்துக்கு என்ன குணங்கள் கற்பித்து 'உண்டா இல்லையா' என்று கேட்டாயோ அதே குணங்களைத் தானே கற்பித்து நானும் ஒரு வஸ்துவைப் பற்றி கேட்டேன். நான் கேட்டது முட்டாள்தனமானால் நீ கேட்டதுஎன்ன சொல் பார்ப்போம்?

தவிர நீ பெயர் இல்லை என்று சொல்லி விட்டு சாமி என்று முன்னுக்குப்பின் முரண் பேசினாய்? நான் அப்படிச் சொல்லவில்லை, பெயர் இல்லாத வஸ்து என்றேன். ஆகவே நான் கேட்டதில் நீ கேட்டதை விட அதிகமான தப்பு என்ன?

மகன்— என்ன அம்மா இப்படி நீ பேசுகின்றாய்? கேட்ட வஸ்துக்கு சர்வசக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம், படைத்துக்காத்து அழித்தல் ஆகியவைகள் உண்டா அம்மா?

தாயார்— மகனே சர்வ சக்தி முதலிய விஷயங்களைப்பற்றியும் படைப்புக் காப்பு அழிப்பு ஆகியவிஷயங்களைப்பற்றியும் பிறகு பார்த்துக்கொள்ளுவோம். வஸ்து நிச்சயம் செய்துகொண்டு குண நிச்சயத்திற்கும் போவோம்.

மகன்—சற்று பொறு அம்மா. நான் போய் வாத்தியாரைக்கேட்டுவிட்டு வருகின்றேன்.

தாயார்—மகனே, நான்முன்னமேசொன்னேன், கிளிப்பிள்ளையைப்போல் வாத்தியார் சொன்னதையேநம்பிக்கொண்டு அவஸ்தைப் படவேண்டாம்என்று. ஆனாலும்குற்றமில்லை. அப்படியே ஆகட்டும் போய் கேட்டுவிட்டு வா, எனக்கு ஆக்ஷேபனை இல்லை. அவர் உனக்கு இன்னம் என்ன என்ன மூடபக்திகளைப் பற்றி, சொல்லி வைப்பாரோ பார்ப்போம். நான் அப்பொழுதே இந்த மாதிரி மூட நம்பிக்கைகளைப் போதிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு நமது பிள்ளைகளை அனுப்பகூடாது என்று சொன்னால், உன் தந்தை அதை கவனிக்கவில்லை. இருந்தாலும் குற்றமில்லை. போய் உன் வாத்தியாரை நன்றாய்க் கேட்டு தெரிந்துகொண்டு வா. வாத்தியார் புத்திசாலித்தனத்தையும் பார்க்கலாம். (தொடரும்)

# செங்கல்பட்டில் தமிழ் நாட்டு சுயமரியாதை மகாநாடு.

தமிழ் நாட்டு சுயமரியாதை மகாநாட்டை செங்கல்பட்டு ஜில்லாவில் கூட்டவேண்டுமென்று செங்கல்பட்டு ஜில்லா பிரமுகர்கள் முடிவு செய்திருப்பதாக பத்திரிகைகளில் காண நாம் மிகுதியும் மகிழ்ச்சியுடன் அவ்வபிப்பிராயத்தை வரவேற்கின்றோம்.

தற்காலம் அரசியல் புரட்டாலும் மதவியற் புரட்டாலும் கஷ்டப்பட்டும் பார்ப்பனர்களாலும் அவர்களது கூலிகளாலும் வஞ்சிக்கப்பட்டும் பகுத்தறிவும் தன் மதிப்பும் இழந்து தவிக்கும் நாட்டிற்கும் பாமர மக்களுக்கும் சுயமரியாதை இயக்கமே ஒருவாறு புத்துயிரளித்து வருகின்றது என்பது நடுநிலைமைகொண்ட அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமேயாகும். அப்பேர்ப்பட்ட இயக்கத்தை நாடுமுழுவதும் பரவச் செய்வதன் மூலம் மக்களுக்கு உண்மையை உணர்த்தி தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பி ஊக்கமூட்டி நிலைத்த உணர்ச்சியை உண்டாக்கவும் அடிக்கடி ஆங்காங்கு மகாநாடுகள் கூட்டி குறைகளை வெளிப்படுத்தியும் பல அறிஞர்களின் உபதேசத்தைக் கேட்கச் செய்தும் நாட்டில் தீவிர பிரசாரம் செய்யவும் வேண்டியது மிகவும் அவசியமானதென்பதும், இது ஆங்காங்குள்ள தலைவர்களுடையவும் பிரமுகர்களுடையவும் கடமையானதுமான காரியம் என்பதும்நாம் சொல்லாமலே விளங்கும்.

இதுவரை பல ஜில்லாக்களிலும் தாலூக்காகளிலும் ஜில்லா தாலூக்கா மகாநாடுகள் கூட்டப்பட்டிருக்கின்றதானாலும் தமிழ்நாட்டுக்கே தமிழ் மாகாணபொதுவான மகாநாடு கூட்டப்படவில்லை. இதற்காக சுமார் 4, 5 மாதமாய் சில ஜில்லாக்காரர்கள் முயற்சிசெய்து வருவதாகத் தெரிந்தாலும், நமது செங்கல்பட்டு ஜில்லாவில் தீவிர முயற்சிசெய்து, ரூபாய் 5000-க்கு மேல் வசூல்செய்யப்பட்டு, வரவேற்பு சபை முதலியவைகளும் ஏற்படுத்தி வரவேற்பு சபை அக்கிராசனரையும் தெரிந்தெடுத்தாய்விட்டதாக தெரியவருகின்றது.

மகாநாட்டுக்கு தலைவரைத் தெரிந்தெடுப்பதில் தக்க கவனம் செலுத்தி சுயமரியாதையியக்கத்தில் மிகுதியும் கவலையும் உறுதியும் கொண்ட கனவான்களாகவும் சுயமரியாதை எல்லோருக்கும் மிக அவசியமானதெனக் கருதும் கனவான்களாகவும் பார்த்துத் தெரிந்தெடுக்கவேண்டும் என்றே விரும்புகின்றோம்.

திருவாளர்கள் சௌந்தரபாண்டியநாடார், எம். கிருஷ்ணன் நாயர், பி. சுப்பராயன் சர். கே வி. ரெட்டி நாயுடு, எம். கே. ரெட்டி, பன்னீர் செல்வம், குமாரசாமி செட்டியார், ராஜன், சண்முகம் செட்டியார் முதலியவர்களைப்போன்றவர்களையே தெரிந்தெடுத்தால் மிகுதியும் பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம சொல்லவேண்டியதேயில்லை.

நிற்க தஞ்சாவூரும் மாகாண சுயமரியாதை மகாநாட்டை நடத்த முயற்சிப்பதாய்த் தெரிகின்றது. தமிழ் நாட்டிலுள்ள ஜில்லா போர்டுகளில் செங்கல்பட்டும் தஞ்சாவூரும் உறுதியானதும் பயமற்றதுமான தன்மையுடன் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு அநுகூலமாயுமிருக்கிறது. அதற்கு காரணம், இந்த இரண்டு ஜில்லா போர்டுதலைவர்களையும் எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் தலை கீழாக பாடுபடுவதே போதியதாகும். பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்கள் கூலிகளும் இவர்களைப்பற்றி தூற்றுத—விஷமப்பிரசாரம் செய்யாத—நாட்களை காண்பது மிகவும் அரிதாகும், சென்னை மாகாணம் முழுவதற்கும் பார்ப்னர்கள் கண்களுக்கு நமது பனகால் அரசர் எப்படி ஒரு பெரிய "இராக்ஷதராக" காணப்படுகின்றாரோ அது போல் தஞ்சை செங்கல்பட்டு ஜில்லாப் பார்ப்பனர்களுக்கு நமது திருவாளர்கள் டி, பன்னீர் செல்வம் அவர்களும் எம். கே. ரெட்டி அவர்களும் 'இராக்ஷதர்'களாகக் காணப்படுகிறார்கள். (இராக்ஷதர்கள் என்றால், பார்ப்பன ஆதிக்கத்தை அழிக்கத் தோன்றியவர்கள் என்பது தத்துவார்த்தம்) இந்த நிலையில் அவர்கள் சுயமரியாதை மகாநாடு கூட்ட முன்வந்தது யாருக்கும் அதிசயமாய்த் தோன்றாது.

தஞ்சை ஜில்லாவில் பார்ப்பனரல்லாதார் மாகாணமகாநாடு கூட்டும் முயற்சியில் மாத்திரம் இருந்துகொண்டு சுயமரியாதை மகாநாட்டை செங்கல்பட்டு ஜில்லாவிற்கு விட்டு விடவேண்டுகிறோம். செங்கல்பட்டு ஜில்லா பிரமுகர்கள் இந்த முயற்சிக்கு தாராளமாய் வெளியில் வந்து வேண்டிய உதவி செய்ய கோருகின்றோம்.


## ஸ்ரீ பாலசுப்மண்ய பஜனை கீர்த்தனை
### சங்கீத வித்வான்
## அய்யாஸ்வாமி தாஸ் இயற்றியது.

ஷையார் அதிநூதன சிங்கார டிராமாவர்ண மெட்டுகளாலும், திருப்புகழ்காவடிச்சிந்து முதலிய வர்ண மெட்டுகளாலும் ஸ்ரீ ஷண்முகக்கடவுளை மன்முருகப்பாடித் துதித்துள்ளார். புஸ்தகமோ அதி அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றது. வேண்டுவோர் விரைவில் 41/2 அணா ஸ்டாம்பு அனுப்பிப்பெறுக.

எஸ். ஸி. நாதன்,
எலப்புள்ளி P. O. பாலக்காடு (S. I. R.)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ல், எவ்வாளும் ஏங்கித்து அழ யாரால் முடியும். மற்றும அழுவதாலும், துக்கப்படுவதாலும் இவ் விதவா வேதனைகள் தீருமோ? சதியைநிறுத்திய ஆங்கிலேய அரசாங்கமே! சதியை நிறுத்திச் சட்டம்செய்தபோது கூக்குரலிட்ட இவ்வைதீகர்களை என் செய்தாய்! 'மதத்தில் தலையிடாதே' என்ற சத்ய மூர்த்திகளை அந்நாளில் என்னசெய்தாய்? உனது சட்டத்தை மீறி சதிசெய்து அஞ்சாமல் ஜெயிலுக்குப்போன வைதீகன் ஒருவனாவது இந்தியாவில் உளனா? பின்னேயேன் மயக்கம்? பெண்கள் விடுதலையில் நீ நாட்டமுற்றதன்மையாகில் இக்கோடானு கோடி இந்துவிதவைகள் இன்பமுற்று வாழச்சட்டமியற்ற மாட்டாயா! இல்லையேல் நீ சதியை நிறுத்தியது எதற்கொப்பாகுமெனின், ஒரேவெட்டில் இரண்டு துண்டாகச்சாகுமொருவனை அவ்வெட்டினின்று மீட்டு சிறுசிறுதாக நாளதோறும் அவன் அங்கங்களைக் கொய்து வேதனைப் படுத்திச்சாக வைப்பதற்கேயொப்பாகும்.

இந்துமத வேதாந்திகள், வேதங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் "ஆத்மாவிற்கு ஆண் பெண் என்ற தன்மையும் வேறுபாடும் இல்லை" (The Soul has no sex) என்று ஒலமிடுகின்றனவே. அப்படியிருக்க ஆண் உடலிலுள்ள ஆத்மாவுக்குள்ள சுதந்திரத்தை பெண்ணுடலிலுள்ள ஆத்மாவுக் கில்லையென ஏன வஞ்சிக்கிறீர்கள்?

இவ்விதவைப் பெண்களின் பரிதாப நிலையை நமது அமெரிக்க மாது மிகவும் உருக்கமான வசனங்களில் எடுத்துக்கூறி இருக்கிறார். அவர் கூறியவற்றில் சிலவாவன:—

"புருஷனிறந்தபின்பு மனைவி புருஷனுடைய வீட்டிலேயே வசிக்கலாம். ஆனால் புருஷனுடைய உறவினர் இடும்வேலைகளை யெல்லாம் செய்யவேண்டும். அவள் புருஷன் வீட்டாருக்கு திருப்திகரமாக பணிவிடைகள் செய்யாவிட்டால் அவளை வீட்டைவிட்டு வெளியே துரத்தினாலும் துரத்திவிடலாம். பின்பு விதவை, பிச்சைபுகவேண்டும், அல்லது விபசாரம் செய்து பிழைக்க வேண்டும். இதைத்தவிர அவளுக்கு வேறு வழியில்லை"

"அறுபது வயதுள்ள ஒருவன் சிறுவயதுள்ள பெண்ணை மணம் செய்து கொள்ளலாமென்றும் ஆனால் அவன் இறந்தபின் அப்பெண்ணுக்கு மறு விவாகம் செய்யக்கூடாதெனச் சொல்லுவதும் பொருத்தமாக வில்லை. இதைவிடக்கொடுமை வேறெதுவுமில்லையெனவே கூறலாம்"

"பால்ய விவாகத்தைத்தடுக்கவேண்டும், விதவைகளுக்கு மறுவிவாகம் செய்விக்க வேண்டும், ஜாதிக்கொடுமைகளை ஒழிக்க வேண்டுமென்று ஊர் ஊராய் கூட்டங்கள் கூட்டி மகாநாடுகள் நடத்தி ஹிந்துக்கள் வெகு உரக்கப்பேசுகின்றனர். ஆனால் ஒன்றும் செயலில் நடப்பதில்லை. எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் விதவா விவாகம் நடந்ததாக எப்பொழுதாவது பத்திரிகைகளில் படிக்கின்றோமேயொழிய விதவாவிவாகம் பலவிடங்களில் நடக்கவில்லையெனவே கூற வேண்டும். மேனாட்டுக் கல்விகற்ற சிலர்தான் இது விஷயத்தில் ஊக்கங்காட்டி வருகிறார்கள்'?

இவ்வம்மை கூறியதில் மறுக்கத்தக்கவைகள் ஒன்றுங்காணோம். இந்தியாவின் சிற்சில நகரங்களில் விதவைப் பெண்களுக்காக விடுதிகள் ஏற்பட்டு, கல்வி கற்பிக்கப்பட்டு, மண முடிக்கப்படுகிறார்களென்பது உண்மையே எனினும், மக்கள் மனதில் விதவைகளை மணம் செய்து கொள்ளுவது "இழிவு" என்ற எண்ணம் உள்ள வரையில் விதவாவிவாகம் வெற்றி பெறுவது கடினம். விதவா விவாகத்தைச் செய்து வந்தவரும் சிற்சில வகுப்பினரும் "மேல் ஜாதிக்காரர்கள்" என்பவர்களும் நாளடைவில் விதவைகளை மணக்கும் வழக்கத்தை விட்டு வருகிறார்கள். ஏனெனில் விதவா விவாகம் செய்கிறவர்களை "சூத்திரன்" என்ற பதத்தை விட "முண்டைகட்டும் சாதி," "கட்டுப்பெண் கட்டும் சாதி" "அறுத்துக்கட்டும் சாதி," என இழிவாக மதித்துப் பேசுகிறார்கள். ஆரிய நாகரீகத்தால் "விதவை மணம் செய்யும் ஜாதிகள்" தாழ்ந்த ஜாதியாக கருதப்படுகின்றது. சாதி மதங்களும், அதற்காதாரமான சாஸ்திரங்களும், மதமும் அழிந்தொழிந்தாலொழிய உண்மையான விடுதலை! மக்கள் சிறப்பாக பெண்மக்கள் பெற இயலாதாகிலும், தற்கால சாந்தியாக நாட்டுப்பெரியார்களை நாம் வேண்டுவதென்னவெனில்,

பெண்களுக்கும் கல்வி கொடுங்கள். ஆண்மக்களுக்குள்ள சொத்துரிமைகளையும், இதர உரிமைகளையும் பெண்களுக்கும் சமமாக வழங்கும்படியான சட்டதிட்டங்களை இயற்றுங்கள். புருஷனிறந்து விட்டால் அவன் சொத்தில் மனைவிக்கும் உரிமையுண்டெனச் சட்டமியற்றுங்கள். பெண்களுக்குக் கல்வியும், அறிவும் சொத்துரிமையும் ஏற்படச் செய்யுங்கள். அக்காலத்தில் விதவா விவாகத்தைப்பற்றி நீங்கள் கவலை கொள்ளவேண்டியதில்லை. ஏனெனில் சொத்தும் அறிவுமுள்ள விதவையை மணந்து கொள்ளாமல் எந்த ஆடவனும் விட்டு வைத்திருக்கமாட்டான். உங்கள் சாதிச் சட்டங்களும் சமயச் சட்டங்களும் உண்மையான அறிவுச் சுடரால் கொளுத்தப்படும். பெண்கள் தாங்கள் "கேட்டுவந்த வரத்தையும்" "பெற்று வந்த பாக்கியத்தையும்" விதிக்கப்பெற்ற "தலைவிதிகளையும்" "பூர்வ சென்மபூஜாபலன்களையும்" உடைத்தெறியும்படியான அறிவையும் ஆற்றலையும் அந்நாளில் பெற்று விடுவார்கள். அந்நாள் எந்நாளோவென ஏக்கமுற வேண்டுவதில்லை. அந்நாள் வெகுவிரைவில் சித்திக்கும்.

# நேரு அறிக்கையும் மகமதலியும்.

மௌலானா மகமதலி இந்தியாவுக்கு வந்ததுதான் தாமதம், உடனே நேரு அறிக்கையின் மேல் வெடிகுண்டு ஒன்று போட்டு விட்டார்". நேரு அறிக்கையைப் பின்பற்றினால் இந்தியாவுக்கு வரப்போவது சுயராஜ்யமல்ல, இந்துமகாசபை இராஜ்யமேயாகும் என்று மௌலானா மகமதலி கூறுகின்றார்.

தேசியப் பத்திரிகைகள் என்ற பார்ப்பனப் பத்திரிகைகள் மௌலானா கூறுவதை ஒப்புக்கொள்ளமாட்டா. ஆனால்நாம் மனமுவந்து ஒப்புக்கொள்ளுகின்றோம். நேரு அறிக்கைப்படி நாளை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அரசியல் சீர்திருத்தம் கொடுத்து விடுவார்களானால் இந்தியாவிற்குப் பார்ப்பார இராஜ்யம் வந்து விட்டதென்று தான் சொல்லவேண்டும். ஏனெனின் நேரு திட்டத்தின்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், வகுப்புவாரித் தேர்தல்கள் என்ற பாதுகாப்புகள்கிடையா. ஆகையால் தாழ்த்தப்பட்ட வகுப்பார், ஒடுக்கப்பட்ட வகுப்பார், கொடுமை செய்யப்பட்ட வகுப்பார் சிறுபான்மை வகுப்பார் எல்லாம் பார்ப்பார வருணாச்சிரம ஆட்சியின் கீழ் நசுங்கவேண்டியதே.

பிரிட்டிஷ் அரசாங்கம் இருக்கின்ற காலத்திலேயேசிலவகுப்பார், தெருக்களில்நடக்க முடியவில்லை, குளங்களிலும் கிணறுகளிலும் தண்ணீர் எடுக்கமுடியவில்லை, எங்கு பார்த்தாலும் சாதி வித்தியாசம் தலை விரித்தாடுகிறது என்றால், பிரிட்டிஷ் அரசாங்கம் போய் நேரு அறிக்கைப்படி இந்து மகாசபையின்ராஜ்யம வந்துவிட்டாலென்ன அக்கிரமங்கள் நடக்கும் என்றுசொல்லவும் வேண்டுமோ? அப்பொழுது இராம ராஜ்யத்தில் நடந்த அக்கிரமங்கள் எல்லாம் நடக்கும். பார்ப்பானைத் தவிர மற்றவர்கள் எவரும் படிக்கக் கூடாது. அவ்வாறு படித்தால் தூக்கில் போடவேண்டும் என்ற சட்டம் மதத்தின் பெயரால் ஏற்பட்டு விடும். அம்மட்டோ! மனு தர்மசாஸ்திரங்களிலுள்ள அநீதிகளெல்லாம் கிரிமினல் சட்டங்களாகவும், சிவில் சட்டங்களாகவும் மாறிவிடும். நம்பாடு ஐயோ! திண்டாட்டந்தான். நேரு திட்டத்தால் இவ்வளவு கேடுகள் நேருமென்பதை அறிந்து தான் நாம் அவ்வறிக்கையைப் பிறந்தது முதல் கண்டித்து வருகின்றோம். மகமதலியும் அதனாற்றான் கண்டிக்கின்றார்.

இந்தியா பல மதத்தார், பல சாதியார் நிரம்பிய நாடு. ஒரு மதம் ஒரு சாதி,மற்றொரு மதம் மற்றொருசாதியைநம்புவது கிடையாது. வகுப்புத் துவேஷம் எங்கும் தாண்டவமாடுகின்றது. இந்நிலையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் வகுப்புவாரித்தேர்தலும் இல்லை என்று நேரு அறிக்கை சொல்லுமானால், அவ்வறிக்கையை யார் பொருட்படுத்தப்போகிறார்கள்? அதை யார் ஆதரிக்கப் போகின்றார்கள்? எத்தனை சர்வகட்சி மகாநாடுகளென்ற நேரு மகாநாடுகள் கூட்டினாலும், எத்தனை காந்திகளும், பெசண்டுகளும நேரு அறிக்கையை ஆதரிக்கவேண்டுமென்று பிரசாரம் செய்தபோதிலும், [illegible] போதிலும் நேரு அறிக்கையை எவரும் ஒப்புக்கொள்ளப்போவதில்லை என்பது திண்ணம.

நாம் நேரு அறிக்கையைக் கண்டித்தமையால் நம்மைச் சர்க்கார் தாசர்களென்று பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்களின் கூலிகளும் எழுதின இன்னும் எழுதுகின்றன. இப்பொழுது மௌலானா மகமதலி கண்டித்து விட்டார்? எனவே, மௌலானாவையும் நம் கட்சியில் சேர்த்து [illegible]? நமக்குக் கொண்டாட்டமே [illegible]'

# "ஆராய்ச்சி முரசு"

"தமிழ் மகன்" ஒலிப்பது

## இறைவன் இருந்தால்?

"எல்லாஞ்செய்யவல்ல"—"எண்ணியவாறே ஆற்றவல்ல"—"சர்வ வல்லமையுள்ள" என்று கூறப்படுவதான—நம்பப்படுவதான "இறைவன்" என்பதான "கடவுள்" என்பது ஒன்று இருக்குமானால், அல்லது பல இருந்தால்,— உலகில் பல திறமான அநியாயங்களும், கொடுமைகளும், புரட்டுகளும் திருட்டுகளும் இன்னோரன்ன பிறவும் நடக்க விட்டுக் கொண்டிருக்குமா? "இன்பமே உருவாய் உள்ள இறைவன்" என்று சொல்லப்படுவதான அந்தக் "கடவுள்" மட்டும் இன்பமாயிருந்து கொண்டு, மற்ற பிராணிகளையும், மனிதர்களையும் துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கச் செய்து கொண்டிருக்குமா? மக்களுக்குள்ளேயே ஒருவர் உயர்ந்தவர், இன்னொருவர் தாழ்ந்தவர் என்று வேற்றுமை கற்பிக்கப் பார்த்துக் கொண்டிருக்குமா? ஒரு சாரார் இன்பமாய் வாழ்வு நடாத்துவதற்கும், மற்றொரு சாரார் துன்ப வாழ்வில் இருப்பதற்கும் துணை செய்து கொண்டிருக்குமா? வாயில்லாப் பிராணிகளை—சாதுவான மிருகங்களை—எதிர்த்து நிற்க வலிமையற்ற உயிர்களை, வலியுள்ள மக்கள் என்பார் கொலை செய்வதற்கு இசைந்து செய்து கொண்டிருக்குமா? தனது "தெய்வீக"த்தன்மையைத் தானே முன்னின்று வெளிப்படுத்தி வைக்க இயலாமல் "தாசர்"கள் மூலமாய்த் தனது "தெய்வீக" சக்தியை விளம்பரஞ் செய்யும்படி விட்டுக்கொண்டு கொண்டிருக்குமா? "சர்வவல்லமை" யுடையதான அந்தக் 'கடவுள்' மாரி என்றும், காளி என்றும், காட்டேறி யென்றும், முனியாண்டி என்றும், ராக்காயி என்றும், மாடன் என்றும், கருப்பன் என்றும் கூறப்படுவதான 'குட்டிக்கடவுள்'களையும் 'எதிர்க்கடவுள்'களையும் இருப்பதற்கு அல்லது, உண்டாக்கப்பட வைத்து விட்டுக் கொண்டிருக்குமா?

பல வேறு [illegible] படியான சமயங்களை (மதங்களை) உண்டாக்க விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா? பல மொழி (பாஷை)களை [illegible] விட்டிருக்குமா? [illegible] ஆளவிட்டுக் கொண்டிருக்குமா? மனிதர் முதலிய பிராணிகள் பிறந்து மறுபடியும் இறந்து போகும்படி படைத்திருக்குமா? தேங்காய், பழம், சாம்பிராணி, சூடம், ஊதுபத்தி, தீபம், ஆகிய பொருள்களைக் கொண்டு தான் தன்னைப் பூஜிக்க வேண்டும் என்று எதிர்பார்க்குமா? தான் இருப்பதற்கு "கோயில்" [illegible] என்று கேட்குமா? ஆயிரக்கணக்கான—லக்ஷக் கணக்கான—[illegible] செலவிட்டு [illegible] மூலமாய்த் தன்னைக் [illegible] வேண்டும் [illegible]? [illegible]? பன்கள் [illegible]; [illegible] கொண்டிருக்குமா? [illegible] முதலிய பிராணிகளுக்குப் 'பிணி' முதலிய துன்பங்கள் வர—அல்லது உண்டாக்கப் பார்த்துக் கொண்டிருக்குமா? மக்களுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் பிரிந்து நின்று சச்சரவு செய்து கொண்டிருக்க விட்டுக் கொண்டிருக்குமா? 'இறைவன்' என ஒன்றில்லை என்றே இறைவனைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்றோ தன்னால் உண்டாக்கப்பட்ட மக்களில் சிலர் எண்ணும்படியான—கூறும்படியான சார்வாகஸ், புத்தர், இங்கர்சால், ஈ. வெ. ராமசாமி உள்ளிட்டோர்களுக்குள் புகுந்து அவர்கள் மனதை மாற்றாமல் வாளாவிருக்குமா? அல்லது "இறைவன் என ஒன்றில்லை" என எண்ணும்படியாக மக்களைப் படைக்குமா? சாதம், காய், கனி, கிழங்கு முதலிய வஸ்துக்களை உண்டு தான் மக்கள் முதலிய பிராணிகள் உயிருடன் வாழ வேண்டும் என்பதான இயற்கையை உண்டாக்குமா? சதா "தெய்வபக்தியை"யே உடைய மக்களுக்கும் துன்பங்களும், கவலைகளும், கொடுமைகளும் உண்டாகும்படி—உண்டாக்கும்படி பார்த்துக் கொண்டு பேசாமல் 'மௌன சாமி'யாயிருக்குமா? நியாயமாகவும், யோக்கியமாகவும், கண்ணியமாகவும் வாழ்வு நடாத்தி வருவோர் துன்புறவும், அயோக்கியர்களும், அநியாயக்காரர்களும், கொலைகாரர்களும், "இன்பவாழ்வில்" இருக்கவும் பார்த்துக் கொண்டிருக்குமா? பார்ப்பனர் என்பவர் பார்ப்பனரல்லாதார் என்பவர்களை நயவஞ்சகமாய் கொடுமையாய்—அநியாயமாய் நடத்தி வருவதற்கு விட்டுக் கொண்டிருக்குமா? ஒரு நாட்டாரை இன்னொரு நாட்டார் அடக்கி ஆள்வதற்கும்—கொடுமையாய் நடத்துவதற்கும் விட்டுக்கொண்டிருக்குமா? தனக்கே (கடவுள்) இப்போது பெரும் ஆபத்து வந்து சேரும்படி விட்டுக் கொண்டு பேசாதிருக்குமா? தான் இருப்பது உண்மை தான் என்பதை மக்கள் முதலியோர் உணரும்படி—அறியும்படி—பார்க்கும்படி நேரில் இன்னும் வாராமல் வாளாயிருக்குமா? இயற்கையிலேயே மக்கள் முதலியோர் அறிவையடைவதற்கு துணையில்லாமல் செயற்கையின் வாயிலாய் பெறுவதற்கு விட்டுக் கொண்டிருக்குமா? 'நீதி'யைக் கொண்டு மக்கள் வாழும்படி செய்யாமல் 'அரச சட்டம்' மூலமாய் மக்கள் வாழும்படி தண்டனையுறும்படி விட்டுக் கொண்டிருக்குமா? தன்னுடைய இருப்பிடமான 'கோயில்' 'தேவாலயம்' (சர்ச்) 'மசூதி' 'பீடம்' 'மலை' முதலியவைகளில் 'இடி' விழுவதற்கும் அழிந்து போவதற்கும் விட்டுக் கொண்டிருக்குமா? மக்களின் வாழ்வுக்கு அவசியமானவைகள் என்று கூறப்படுவதான உணவு, உடை, நீர், காற்று, தீ ஆகியவைகளை எக்காலத்திலும் சமமாய்க் கொடாமல், சில சமயங்களில் மிதமாகவும், வேறு சில சமயங்களில் அமிதமாகவும், கொடுக்குமா? உலகில் உள்ள அனைவருக்கும் ஒரே விதமான குணத்தை—எண்ணத்தை—அறிவை பிறவற்றைக் கொடாமல், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான குணங்களையும் எண்ணங்களையும்—அறிவுகளையும் உண்டாக்கி பலத்த 'குளறுபடி'யை உண்டாக்குமா? கோடிக்கான மக்கள், உண்ண உணவின்றி உடுக்க ஆடையின்றி காடுகளிலும், மலைகளிலும், வனங்களிலும், கிராமங்களிலும், நகர்களிலும் துன்பவாழ்வு நடத்தும்படி பார்த்துக் கொண்டு— அல்லது செய்து கொண்டிருக்குமா? சில சமயங்களில் அதிகம் மழை பெய்யவும், சில சமயங்களில் பெய்யாமலிருக்கவும் செய்து கொண்டு அல்லது பார்த்துக்கொண்டிருக்குமா?

பம்! பம்!! பம்!!!

(இன்னும் ஒலிக்கும்)



இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.


எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்.

வாஸன் புஸ்தகசாலை,

244, தங்கசாலைவீதி, சென்னை.

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி, கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்தரவாதமானது. ரூ4-15-0 வி. பி. வேறு

ஜீனன் வாட்சு கம்பெனி

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

## சுயமரியாதைத் திதி

27—11—28ல் செவ்வாய்க்கிழமை யன்று, கொண்டி தோப்பு சுப்பராயபிள்ளைத் தெரு 1-ம நெம்பர் வீட்டில் காலஞ்சென்ற திரு. காக்களூர் முத்துகிருஷ்ண முதலியாருக்கு முதல் ஆண்டு நிறைவு விழா மிக்க விமரிசையுடன், பார்ப்பனரை நீக்கி, பார்ப்பனரல்லாத சைவ ரொருவரைக் கொண்டு சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது. இடையிடையே இன்னிசைக் கருவிகளுடன் திரு.தேவாரம் வேதாசல முதலியார் அவர்களாலும் தேவாரம் மாணவர்களாலும் திதிக்குடையரான முத்துகிருஷ்ண முதலியாரின் புதல்வர் புதல்வியாலும் தேவாரம் ஓதப்பட்டது. அங்க ஈனர்களும் பரம ஏழைகளுமாகிய சுமார் இருநூறு மக்களுக்கு விருந்து அறுசுவையுடன் அன்னமளிக்கப் பட்டது. அவ்வமயம் தமிழ்ப்புலவர் மணி. திருநாவுக்கரசு முதலியார், திருவள்ளூர் முன்சீப்பும் பஞ்சாயத்துத்தலைவருமான திரு. ரங்கநாதமுதலியார், அமிர்தலிங்கமுதலியார் பி.ஏ. ரத்னமுதலியார் ஆகியவர்களும் மற்றும் சில பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தனர். பணச்செலவதிகமின்றியும், மிக்க ஆடம்பரமின்றியும், மூடப்பழக்கங்களையும், அருத்தமற்ற சடங்குகளையும் ஒழித்து, கிரியைகள் அதிகமின்றி எளிதில் முடிவுபெற்றன. இதனை முன்னிருந்து நடத்தியவர் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய அங்கத்தினர் திரு. தி. ஜெயராமன் அவர்கள் பாராட்டுதற்குரியர். குடியரசுயர்த்திய கொற்றவன் வாழ்க! சுயமரியாதைச் செல்வன் வாழ்க!!

வல்லை பாலசுப்பிரமணிய முதலியார் பி.ஏ.




இனாம்! ரப்பர் முத்திரை இனாம்!!

நமது சக்கரவர்த்தி அவர்களால் நன்கு மக்கதிப்பெற்ற 14 காரட் கோல்டு நிப்பு பதித்த பவுன்டன் பேனா வெகுநாளைக்கு உழைக்கும். எல்லா காகிதத்திலும் நன்றாய் எழுதும்

இந்த பேனா வாங்குவோருக்கு அவர்களுடைய முழு விலாசத்துடன் (ரப்பர் முத்திரை) இங்கிலீஷில் (இனாமாய்) செய்தனுப்பப்படும்.

பேனா 1க்கு ரூ 2-10-0 கேட்லாக் இனாம்.

டி ஜி. எஸ் அண்டு கோ

8, கோவிந்தப்பநாயக்கன் வீதி, (மதராஸ்)





# ஜீவரசம்.

## ஓர்சிறந்த குடும்பஔஷதம்.

ஜீவரசம் சகல வியாதிகளையும் குணப்படுத்துவதில் முதன்மை பெற்றது.

ஜீவரசம் குழந்தைகள் முதல் விருத்தாப்பியர் வரை பயமின்றி உபயோகிக்கக்கூடியது அதற்கு பத்தியம் அனுபானமில்லை.

டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள், ஜமீன்தார்கள், எஸ்டேட் துரைமார்கள், வக்கீல்கள், தேசிய தலைவர்கள் உபயோகித்து நன்கு மதித்து நற்சாக்ஷி பத்திரங்கள் தந்துள்ளார்கள். ஒரு முறை உபயோகித்துப்பார்த்தால் அதன் உண்மை விளங்கும்.

விலை ரூபாய் 1—8—0. செலவு வேறு

வியாபாரிகளுக்கு விலை வேறு.

ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக

**ஜீவரசம் கம்பெனி, (லிமிடெட்)**

**(2) காரைக்குடி S. I.**

முக்கிய வியாபாரிகள்:—

T. N. சொக்கலிங்கம் பிள்ளை அன் சன்ஸ்,
வடக்கு சித்திர வீதி, மதுரை.

M. இஸ்மாஹீல் சாஹிப்,
அய்யங்கடை, தஞ்சாவூர்.



# வெள்ளி நகைகள்.

சுத்தமான வெள்ளி! நேர்த்தியான வேலை!

நம்மிடம் அரைஞாண், முடிச்சுருத்திக்கொடி, முகப்பு போட்ட கொடி, சாதா செயின் கொலுசு, முத்துசெயின் கொலுசு, டைமண்ட்பட்டை செதுக்கிய செயின் கொலுசு, புதுச்சேரி கொலுசு, மாங்காய் பட்டை கொலுசு, கடகம், கால் தண்டை, மயிர் மாட்டி, அறைப்பு சங்கிலி, சாவி கொத்து, போல் காப்பு, சலங்கை, இன்னும் பலவித வெள்ளி நகைகளும், கடுக்கன், கம்மல், தோடு, மூக்குத்தி, மோதிரம் முதலிய கல் நகைகளும் தயார் வியாபாரிகளுக்கு மொத்தமாயும் விலை சரசமாயும் அனுப்பப்படுகின்றன. ஒரு முறை ஆர்டர்செய்து பாருங்கள். மற்ற விபரங்களுக்கு லெட்டர் எழுதுக.

B. N. கெங்காராமய்யர்,

நகை வியாபாரம், செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. India.



80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

# அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், நிறம் வாடை குணம் அமைந்துள்ளது எங்கள் உலக டிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்

( V. 120 ) ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,

போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

உப வேதம், காமிக முதலிய ஆகமங்கள், கபாலம், வாகுளம், முதலியவைகளையும் இவைகளின் பேதம், பாசுபதம், ஸோமம் பைரவம் முதலியவைகளையும் இவைகளின் அனந்த பேதங்கள் விஷ்ணுவாகமம் பிருமமாகமம், ஆர்கதாகமம், லோகாயதம், விஸ்தாரமான தர்க்கசாஸ்திரம், கம்பீரமான மீமாம்ஸசாஸ்திரம், சாங்கிய யோகம் முதலிய அநேக பேதமான சாஸ்திரங்களையும் நம்கடவுள் நமக்குத் தந்திருந்தும், அதைக் காக்க அநேக தெய்வங்களும் தேவர்களுமிருந்தும் அதைக் காத்து அதற்கு ஆதாரமாக எத்தனையோ விதவிதமாய் திருப்பித்திருப்பிக் கோர்த்துச்சேர்த்து சுருக்கிப் பெருக்கி அரங்கேற்றின ஆயிரக்கணக்கான ஏடுகளிருந்தும், அதைக் கொண்டு செலுத்த கோடிக்கணக்கான மூர்த்திகளும், ஸ்தலங்களும், தீர்த்தங்களும், கொள்கைகளும் நேரும் திரு நாள்களும், அதைக் கொண்டு நடத்தின சமயக்குரவர்களும், ஆசாரிகளும், புரோகிதர்களும், குருக்களும், ஞானப் பாலுண்டவர்களும் பிள்ளையாருக்குச் சோறு ஊட்டினவர்களும், இவர்கள் சொன்னதை விரிவுபடுத்தின வியாக்கியானக் கர்த்தாக்களும், உபாத்யாசிரியர்களும் திரு முறை தொகுத்தவர்களும், பெரு மொழி பாடினவர்களும், இவர்கட்குத் துணை புரிந்த வாணியும், சாவியும், கௌரியும், வராகியும், இத்தனையாலும் சொர்க்கமடைந்து இனியும் சொர்க்கத்திலேயே இருக்கும் பக்த கோடிகளும், இவர்கள் பாதமே கெதி அதற்கு உச்ச சான்றும் அகப்பற்றுமே பிரமாணமென்று கூறும் பண்டிதர்களுமிருந்தும், இத்தனையும் காப்பாற்றும் மந்திரங்களான தாரகமென்ன, பிரணவமென்ன, பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷரமென்ன, கணேசமென்ன, மகா சக்தியென்ன, காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் மூவகை அளவைக்குள் ஒன்றுமல்லாமல் வேதமே அதுவாய் கலியுகத்திற்கு வந்த பராசர் ஸ்மிருதியென்ன, ஆகிய இவைகளெல்லாம் இருந்தும், செல்வரித்த மீதி கம் செழிப் பொழிந்த தில்லை வாழ் அந்தணருக்கும் தம் அடியாருக்கு மடியேன் என்னும் சிவபெருமான் எழுதிக் கொடுத்த சீட்டு மண்மூடிப் போகாமலிருந்தும், இன்னும் ஒரு பதத்திற்கே பொருள் ஒரு பண்டிதர் கூட்டவும், ஒருவர் செதுக்கவும், மற்றொருவர் ஒட்டவும், பின்னொருவர் பிரித்துப் பார்க்கவும் பக்ஷமிருக்கும் பல பண்டிதர் பலவாறு சொல்லவுமான பண்டிதத்திறமை அநேகமிருந்தும், இத்தனை சேனை சமுத்திரங்களையுடைய எமது சமயத்துக்கு ஒரு மனிதன் மீது அக்கறையில்லாது ஆபாண்டமாக கல்பிக்கப்பட்ட தீட்டைப்போக்கும் திறனில்லையே!

ஒரு வேளைச்சோறு, ஒரு வேஷ்டி, ஒரு அவுன்ஸ் தண்ணீர், ஒரு பாதிரியோ ஒரு மௌல்வியோ இவர்களின் நாலு நன் மொழி உபதேசம் ஆகிய வைகளே எல்லாத்தீட்டையும் ஓட்டி அவனையும் மனிதனுக்கி பொது அறிவில் புகுந்து கொள்ள புது மனிதனுக்கி விடுகிறது. பண்டிதர்களே! இது என்ன புதுமை பார்த்தீர்களா? இதை விட அவனுக்குச் சொர்க்கம் வேறு உண்டா? நாம் சொல்லுமொருவனுமா மேல்தீட்டு, தேவாரம் திருவாய் மொழிகளால் நீக்கப்படாமலிருத்தல், சாந்தமாயும், மௌனமாயும், மகிமை பிரதாபத்தோடும் காம்பீரியத்தோடும் ஆகாசத்திற்கப்பாலும் துக்கத்திற்கப்பாலும் வீற்றிருந்து ஜகத்பதியாகிய பரமாத்மாவின் பங்கும் போகும் சக்தியை எப்படி அவை உங்களுக்கு உதவும்? என்னும் கேள்விக்குப் பண்டிதர்களே பதில் சொல்ல வேண்டும். அவற்றைப் பற்றிய வாசாகைங்கரியமான வெற்றுரைகள் எவ்வளவு அழகாய் சித்தரிக்கப்பட்ட கட்டு மூட்டைபோல காத்தாலும் மதமாய் விடாது. மதமென்பது ஆத்மநிஷ்டையும் சுவானுபூதியுமேயன்றி கேவலம் வெறும் மானஸீக சம்மதியன்று கடவுளின் தெய்வீக தத்துவத்தை நம்பி அந்த தத்துவமாய் நம் முழுசொரூபத்தையும்மாற்றிக் கொள்ளுவதே சமயமெனப்படும். வெறும் மானஸீக சம்மதியால் எண்ணிக்கொண்டிருக்கும் மூடக் கொள்கைகளை விட்டுவிட்டால் தெய்வாம்சம் சித்திக்கு மென்று நீங்களும் நாங்களும் பார்க்கும் உலக அனுபோகத்தைச் சொல்ல உங்களையும் துணையாகக் கொண்டு நாம் ஆச்சரியத்தோடு பார்த்துப் போற்றும் மகான்கள் வரையிலும் கடவுளின் அம்சமென்று எல்லாரும் தெரிந்த தேவாம்சத்தை நம் நாட்டில் கொண்டு வரவே "குடி அரசு" வந்ததேயல்லாமல் உங்கள் பெரியவர்களைக் குற்றம் சொல்ல வந்ததன்று.

தெய்வாம்சத்தின் சக்தி இல்லாமல் மேனாட்டாரின் பலம் கேவலம் மிருக, யந்திர, பலம்போலிருந்தால் இத்தனை உன்னத நிலைக்கு வந்திருக்காது. அதன் இருதயத்தில் தெய்வாம்சம் இருக்கத்தான் செய்கிறது. அதன் கைகள் உலகத்தில் விளைக்கும் தீமைகளையெண்ணி அந்த அம்சம் கஷ்டப்படுகிறது. அத்தீமைகளை வழி கண்டு பிடிக்க மீட்டு மீட்டும் தன் செல்வத்தை செலவும் செய்கிறார்கள். தன் கையால் பலம் குறைந்தவருடம்பில் கட்டினதளைகளை தானே வெட்டுகிறார்கள். பண ஆசையால் ஒரு பெரிய தேசத்தின் தொண்டையில் விஷத்தை யிறக்கி அவர்கள் கொண்டு வந்த அதிர்ஷ்டத்தால் அந்த தேசம் சிறந்து சிவியுமாகிறது. இதனால் செத்தனவும் பலிதமற்றனவுமாகத் தோன்றுமிடங்களிலே கூட மானுஷிபத்தின் ரகசிய ஊற்றுகள் இருப்பதாக அவர்களாலேயே ருசுவாகிறது. எத்தனை ஆசையிருந்தாலும் அவர்களிடம் மிஞ்சியிருக்கும் ஆழ்ந்த உண்மை கேவலமன்று. பரோபகார சிந்தைகளில் அதற்குள்ளபக்தி ருசுவாயுமிருக்கிறது. அதை ஆதாரமாகக் கொண்டே நாம அவர்களிடம் அதிகார வழிகளைப் பற்றி மாத்திரமே யல்லாமல் மானஸீக தார்மீக லோகச் செய்திகளும் பல கற்றுக் கொள்ள வேண்டு மென்று உலகப் பொது அறிவால் மெச்சப்பட்ட நம் பெரியவர்களும் சொல்லுகிறார்கள்.

இன்னும் அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்தன யாவை என்றால், குடும்ப ஜாதிகளின் நலத்தைக் காட்டிலும் உலக நன்மையின் உயர்ந்த கடமைகளே மேலென்றும் சட்டம் புனிதமென்றும் காட்டுகிறார்கள். சட்டம் பரிசுத்த மென்பதால் சமூகம் தனி மனுஷனுடைய சேஷ்டைகளைக் கடந்து நிற்கிறது. அவர்கள் சமூக விர்த்தியிலே தொடர்ச்சி தவறுதிருக்கிறது. எல்லா நிலையிலுள்ள எல்லா மனிதருக்கும் நியாயம் கிடைக்கிறது. நம்மால் அவர்கள் மயக்கங்களையும் கோபங்களையும் நாம் எதிர்ப்பதில் அவர்களையே துணை கூப்பிடுகின்றோம். அப்பொழுது சீர்தூக்கும் அளவு கோலைத்தன் சொந்தமாகக்கொண்டு சமர்த்து வருகிறார்கள். அந்த அளவு கொண்டே எல்லாம் அளக்கலாம். அவர்களை அவர்களுடைய சொந்த நியாயஸ்தலத்தின் முன்னே இழுக்கலாம், வெட்கப்படுத்தலாம். அந்த வெட்கம் உண்மையான பெருந்தன்மையின் மானத்திற்கு லக்ஷணம் என்பதும் அவர்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள். இவ்வளவுமின்றி இத்தனைத்திலும் விசேஷம் யாதெனில் அவர்கள் நமது கண்முன்னே பல நூற்றாண்டுகள் வருந்தி சித்தி பெற்ற விடுதலையின் கொடியை தூக்கிக் காட்டுகிறார்கள். கொள்கையில் விடுதலை, யோசனையில் விடுதலை, செய்கையில் விடுதலை, கலையிலும் இலக்கியத்திலும் விடுதலை. ஆயிரமாயிர வருஷமாக நாம் வருந்தியடைந்த சாமிகளாலும் சாஸ்திரங்களாலும் அதைப் பரப்பும் பண்டிதர்களாலும் ஒரு தீட்டைப் போக்க இனியும் திண்டாடுகிறோம். (தொடரும்)

## இவ்வாரம் புரோகிதத்தையும் பார்ப்பனீயத்தையும் ஒழித்த வீரர்கள்.

திருவாளர்கள்.

1. ர. துரைசாமி நாயுடு,
பூஜை மேடு,
கடலூர் தாலூக்கா.
2. கோவிந்தசாமி நாயுடு,
சாரங்கபாணி நாயுடு,
சிங்கப்பூர்
3. மு. சு. முத்துசாமி படையாச்சி
முனிசிபல் கௌன்சிலர்,
செங்கோட்டை.
4. ஆ. சாரங்கபாணி செட்டியார்,
நெல்மண்டி ஆத்தூர் தாலுக்,
சேலம் ஜில்லா.
5. பத்மனுப நாயுடு,
ரெவின்யூ இன்ஸ்பெக்டர்,
கொட்டாம்பட்டி பிர்க்கா.
6. அனந்த பத்பனுப நாயுடு,
கௌரவ மாஜிஸ்ட்ரேட்,
தென்காசி.
7. கன்னியப்ப முதலியார்,
சோழ வந்தான்,
மதுரை ஜில்லா.
8. கந்தசாமிப் பிள்ளை,
கர்னம்,
கொட்டாம் பட்டி.
9. வை. ஆதியப்ப முதலியார்,
காட்டூர் கிராமம்,
நன்னிலம் தாலூக்கா.
10. கோ. ராமய்யா முதலியார்.
காட்டூர் கிராமம்,
நன்னிலம் தாலூக்கா.
11. வி. ஜெயராம் நாயுடு. சேயூர்,
ஆச்சார பாக்கம் மார்க்கம்.
12. எஸ். வி. பாலகிருஷ்ண பிள்ளை,
எஸ். வாசுதேவ பிள்ளை
அண்ணுபிள்ளைத் தெரு, சென்னை.
13. T. முத்து செட்டியார்,
மகள் சீதாலக்ஷ்மி,
அண்ணுபிள்ளைத்தெரு, சென்னை.
14. பழனிக்குமார பிள்ளை,
சுப்பையா பிள்ளை,
வத்தலகுண்டு நிலக்கோட்டை.


## தேவை.

பெரியகுளம் முனிசிபல் ஸ்திரீகள் குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு பூரா யோக்யதாம்சமுள்ள ஓர் மருத்துவச்சியும் ஓர் ஸ்திரீ கம்பவுண்டரும் தேவை. ஆரம்ப சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30. 31-12-28க்குள் பூரா விபரத்துடன் விண்ணப்பம் போடவேண்டியது.

முனிசிபல் ஆபீஸ், பெரியகுளம். 7—12—1928.

S. சந்தானகிருஷ்ணன், வைஸ்-சேர்மன்.


தப்பிலி.

புதிய கட்டுரைகள் 12. ஆசிரியர்வாளுள் வாலாறுபடத்துடன் விலை அணு 10.

விலாசம்— மு. சு. பூர்ணலிங்கம் பிள்ளை, முன்னீர்பள்ளம், திருநெல்வேலி ஜில்லா.

# பொடி! பொடி!! பொடி!!!

## சிறந்த மணமும் உயர்ந்த குணமும் வாய்ந்த நேர்த்தியான,

# புகையிலைப் பொடி

சுமார் ஐம்பது ஆண்டுகளாகப் புகையிலைநோட்டம் நன்கு அறிந்தவர்—கைபாகம் வல்லவர்—செய்பாகம் உள்ளபடி உணர்ந்தவர்—

## அவர் யார்?

அவர் தாம் பொடியுலகில் ஆதி புருஷராகிய றெட்டேர் ஷண்முக முதலியாரின் அருமைக்குமாரர் றெட்டேர் காசி விஸ்வநாத முதலியார்,

அன்பர்களே! அபிமானிகளே!!

பல போலிப் பொடிகளைப் போட்டு ஏமாராதீர்கள்!

உலகமெங்கும் புகழ் பெற்ற நமது றெட்டேர் காசி விஸ்வநாத முதலியாரவர்களால் செய்யப்படும்

## உயர்ந்தபொடியினை

ஒரு முறை வாங்கிப்போட்டுப் பாருங்கள். பொன்போல் நிறமளிக்கும். நெய்மணம் வீசும், ஆறு மாதமானாலும் காரம் குறையாது.

| | |
|---|---|
| விலை வீசை 1-க்கு | ரூ 3—8—0 |
| மதுரை முதல் நம்பர் வீசை ஒன்றுக்கு | ரூ 4—0—0 |
| மதுரை இரண்டாம் நம்பர் வீசை 1 க்கு | ரூ 3—8—0 |

தபால் சார்ஜு பாக்கிங் சார்ஜு பிரத்தியேகம்.

எமது பொடிக்கு ஏஜன்ஸி வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம்.

எமது விலாசம்:—

பொடிக்களஞ்சியம்.

மானேஜர் R. காசிவிஸ்வநாத முதலியார்.

தபால் பெட்டி 156, சென்னை.



பி. டோரியல் கம்பெனி,




149 பிராட்வே, சென்னை.



ஆதியே துணை.

# இனும்! இனும்!! இனும்!!!

1929-வருஷத்திய அழகான காலண்டர் தங்களுக்கு தேவையானால் விலாசம் தெரிவித்தால் இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—


A. E. முஹையத்தீன் மெடிக்கல் ஹால்,

வலங்கைமான், தஞ்சை ஜில்லா.



நீங்கள் நெடு நாட்களாக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## பயாஸ்கோப் மிஷின்



வந்து விட்டது. தினம் இம்மிஷினைக் கொண்டு ரூ. 4 அல்லது 5 சம்பாதித்துக் கொள்ளலாம்.

நூதனமான அமெரிக்கன் பயாஸ்கோப் மிஷின் (படத்தில் காட்டியது போலவே இருக்கும்) இசற்கு, எண்ணெ விளக்கும் இருக்கிறது; இந்த பயாஸ்கோப் மிஷினில் இதில் வரும் பிலிம் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு வந்தால் அழகிய-லேடிகளின் நாட்டியங்கள், சர்க்கசுகள், குதிரைப் பந்தயங்கள், மோட்டார் ஓடுவது, கப்பல்கள் ஆகாய விமானம் முதலியன யாவும் பெரிய பயாஸ்கோப்புகளில் காணுவதுபோல் இம்மிஷினில் சுலபமாகக் காணக்கூடும். விலை ரூ. 2-8-0 மிஷினுடன் இரண்டு பிலிம். இனாம். பிரத்தியேகம் பிலிம் டஜன் 1-க்கு ரூ. 1—0—0 வி. பி. சார்ஜ் 0—8—0

பீ. ஆர். ரங்கநாதம் அண்டு கம்பெனி,

9, நாகமணி தோட்டத் தெருவு, மதராஸ்.



## அநுபவ சிந்தாமணி.

பல அரிய விஷயங்களடங்கிய இந்நூலானது மக்களின் அறிவை விளக்கி பற்பல வித தொழில் செய்யும் முறைகளைக் கற்பித்து அதன் மூலம் மிகுந்த செல்வத்தை சம்பாதிக்கும் மார்க்கங்களை போதிக்கின்றது. தன் ஜீவனத்திற்குப் பிறர் உதவியை எதிர்பாராமல் சுயமாக பணம் சம்பாதிக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்நூல் அவசியமானது. புஸ்தகம் 1-க்கு விலைரூ. 1—0—0

விலாசம்:— தேசநேசன் ஆபீஸ்,

19. தம்புசெட்டி தெரு, மதருஸ்.



## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. சரக்குகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.

திரௌபதை அம்மன் கோவில் வீதி.

புதுச்சேரி.



## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 வது ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரித்தும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங் ஒர்க்ஸ்.

மைலாப்பூர், மதராஸ்.


# விலாசம் தேவை.

வாழ்க்கையின்பம், காதற் பெருக்கு, பாவச முதிர்ச்சி, புது ஊக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், "ரகஸ்ய ரத்னம்" என்ற புத்தகத்தை இனாமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்-

அமிர்தம் அண்டு கோ.,
தபாற்பெட்டி 222,
மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்தவிலை ஏற்பாடு.

## இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பபோட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினோன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.


ரோல்டு கோல்டு "கோல்டன்" ஹாரங்கள்



இவைகள் பரிசுத்தமான ரோல்டுகோல்டில் தயாரித்தது இடையிடையே இமிடேஷன் வைரங்கள் பொதியப்பெற்றது. இருதயபதக்கத்துடன் கூடியது.

விலை ரூ. 2—0—0.

ரோல்டு கோல்டு "கோல்டன்" மோதிரம்



இமிடேஷன் வைரங்கள் பொதியப்பெற்றது. பார்வைக்கு ரூ 100 மதிப்புடையது. விரல்களுக்கு நல்ல அணிகலம். ஒருமுறை வாங்கியவர்கள் திரும்பவும்வாங்குகிறார்கள். விலை ரூ 1—8—0 உடனே எழுதுங்கள்

ஜினோன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

சீனவேதம் அல்லது சகத்தின் சூட்சமம்

கடவுளின் கொடுமை, தோத்திரத்திமை, சங்கீதமே சிற்றின்பம், சங்கீதமே சிறுமிக்கும், சக்தி யைக்குறைக்கும், இரக்கமழிக்கும், புகழ்மொழி படுகொலையே, மொழியே நமது சத்துரு, அற்புதங்களின் அட்டகாசம் முதலிய பொருளடக்கத்துடன் 42 கோடிசின சனங்களின் நிர்வாண கன்பூஷசனின் கனித்தமொழிகளடங்கிய நூல்.ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் இயற்றியது. அணா 12. கூடன் அண்டு கோ. 14 பள்ளியப்பன்தெரு, சவுகார் பேட்டை, சென்னை

இனாம்! இனாம்!! இனாம்!!!


135 இங்கிலீஷ் தனித்தனி ரப்பர் எழுத்துகள் இனாம்.

5-வருஷம் உத்தரவாதம்] ராஜூ'ஸ் [ரிஜிஸ்டர் செய்தது.

தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5

இந்தத் தமிழ் எழுத்துகளடங்கியபெட்டிஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்க வேண்டியது.ஏனெனில்,தங்களுக்குத்தேவையான, விலாசங்கள், முதலியவைகளைத் தாங்களே அடிக்கிக்கொண்டு கார்டு, கவர், கடிதம் லேபில்கள் முதலியவைகளில் தமிழிலும் இங்கிலீஷிலும் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம்- இந்தப்படத்தில் கண்டபடி அசாவது.—

அ அ அ அ ஆ ஆ ஆ இ இ ஈ ஈ உ உ ஊ ஊ எ எ ஏ ஏ ஐ ஐ ஒ ஒ ஓ ஓ



இம்மாதிரி தமிழ் எழுத்துக்களும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும், ஸ்பேசுகளும் பூக்களும் உள்பட 450 ரப்பர் எழுத்துகள் அடங்கிய தகரப்பெட்டி 1-ம், இத்துடன் நான்கு வரிகளை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1, மைப்புட்டி 1, பிரஷ் 1, சாவணம் 1, மை ஊற்றிய ஸெல்ப் இங்கிபாட் 1, ஒருவரி டைப் ஹோல்டர் 1, முதலியமொத்தம் சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5 செட் 1-க்கு விலை ரூ 5—8—0 மேல்கண்ட தமிழ் ரப்பர்எழுத்துப்பெட்டி 1 வாங்குபவர்களுக்கு 'குடி அரசு' பத்திரிகையில் கண்டதாக எழுதினால் A B C D E இம்மாதிரியான இங்கிலீஷ எழுத்துக்களும். நம்பர்களும் உள்பட 135 தனித்தனி ரப்பர் எழுத்துக்கள் இனாமாக அனுப்பப்படும்- (மேற்படி இங்கிலீஷ் ரப்பர் எழுத்துக்கள் மாத்திரம் வேண்டுமானால் செட் விலை ரூ 1—6—0 வி. பி. தபால் சார்ஜ். வேறு

(V100) மைதா விலாசம்:— அ, ராஜூ பிள்ளை அண்டு பிரதர்,

இந்தியா ரப்பர் எழுத்துத்தொழிற்சாலை, 54, பஜார்ரோட், சூளை மதராஸ்

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

# மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்


நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை வைரக்கடனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முகதேஜஸூம், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA

ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுநூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோ மிகவும் தெளிவாக விழுகிறது. காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது காலைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்


ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களால், ஈரோடு 'உண்மை விளக்கம்' பத்திரிகையில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.